விலை ரூபா: 8.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 தை 05 செவ்வாய்க்கிழமை (18.01.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 30




# பணிகள் முடிவடைந்த கையுடன் அமெ. படைகள் நாடு திரும்பும்

## உறுதியளிக்கிறார் பிரதி இராஜாங்கச் செயலர்

(கொழும்பு)

**சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் இடம் பெற்றுவரும் நிவாரணப் பணிகள் நிறைவடைந்ததும் இலங்கையிலுள்ள அமெரிக்கப் படைகள் தமது நாட்டுக்கு திருப்பி அழைக்கப்படுவார்கள் என அமெரிக்க பிரதி இராஜாங்கச் செயலர் போல் வூல்பீட்ஸ் தெரிவித்துள்ளார்.**

நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறுகையில், சுனாமி அனர்த்தத்தின் பின்னரான நிவாரண நடவடிக்கையில் அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் இணைந்து செயற்படுவது எமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

இவ் இணைந்த செயற்பாடு சமாதான முயற்சிகளிலும் தொடரவேண்டும். இலங்கையில் சமாதானம் ஏற்பட்டு அமைதியான சூழ்நிலை உருவாகுவதையே அமெரிக்க அரசாங்கம் விரும்புகிறது. 700 ற்கும் மேற்பட்ட அமெரிக்க இராணுவத்தினர் இலங்கையில் புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக வந்திருக்கின்றனர்.

இதில் அநேகமானோர் பொறியியலாளர்களாவர். நீண்டகால புனரமைப்பு நடவடிக்கைகளுக்கு உதவுவதே இவர்களின் பிரதான நோக்கமாகும்.

இந்த இராணுவ குழுக்கள் எந்தக் காரணத்திற்காகவும் யுத்த நடவடிக்கைகளில் ஈடுபடமாட்டார்கள். அதற்கு நாங்கள் எவ்

(12 ஆம் பக்கம் பார்க்க)



## கனடிய பிரதமருடன் கூட்டமைப்பு சந்திப்பு

### தமிழர் புனர்வாழ்வு கழக பணிப்பாளரும் பங்கேற்பு

(கொழும்பு)

கனடியப் பிரதமர் போல் மார்ட்டினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று சந்தித்துக் கலந்துரையாடினர்.

இச் சந்திப்பின்போது சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென நிவாரணப் (12 ஆம் பக்கம் பார்க்க)



## 40 ஆயிரத்தை விஞ்சுகிறது உயிரிழந்தோர் தொகை

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் உயிரிழந்தவர்களின் தொகை 40 ஆயிரத்தைத் தாண்டும் என அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் திலக் ரணவீரராஜா தெரிவித்துள்ளார்.

நேற்று மாலைவரை கிடைக்கப்பெற்ற புள்ளிவிபரங்களின்படி உயிரிழந்தவர்களின் தொகை 38 ஆயிரத்து 321 ஆகும்.

வடக்கு கிழக்கு மாகாணத்தில் உயிரிழந்தோர் தொடர்பான சரியான விபரங்கள் இன்னமும் கிடைக்கவில்லை. குறைந்த அளவிலேயே சடலங்கள் தற்போது கிடைக்கப்பெற்று வருகின்றன. நேற்று மட்டும் நாட்டில் 6 சடலங்கள் மீட்கப்பட்டன. இவ்வாறு பார்க்கும்போது உயிரிழந்தவர் தொகை 40 ஆயிரத்திற்கும் மேல் செல்லலாம்.

இதில் வடக்கு கிழக்கில் காணாமற்போன 7 ஆயிரம் பேர் உள்ளடக்கப்படவில்லை. இவ்வாறு பார்க்கும்போது உயிரிழப்புக்கள் மேலும் அதிகரிக்க இடமுண்டு என்றும் அவர் கூறினார். (ச-04)

## ஆட்கொணர்வு வழக்கில் ராஜபக்ஷ நேற்று ஆஜர்

(யாழ்ப்பாணம்)

1996, 1997 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் படையினரால் கைதுசெய்யப்பட்டு காணாமற்போனோர் தொடர்பான ஆறு ஆட்கொணர்வு வழக்கு நேற்று யாழ். மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது வழக்கின் எதிர் மனுதாரரான மரண தண்டனைக் கைதி லயன்ஸ் கோப்ரல் ராஜபக்ஸ நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. செயலரைத் தடுத்தமைக்கு ஜே.வி.பி. ஜனாதிபதிக்கு பாராட்டு

(கொழும்பு)

ஐ.நா. செயலர் கொபிஅனானை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குச் செல்லவிடாது தடுத்தமைக்கு ஜே.வி.பி. ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்துள்ளது.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் ஐ.நா. செயலர் விஜயம் செய்திருந்தால், அது விடுதலைப் புலிகளை உலக நாடுகள் அங்கீகரித்ததாகிவிடும். இந்நிலையில் கொபிஅனானின் விஜயத்தை அரசு திட்டமிட்டுத் தடுத்தமையானது பாராட்டப்பட வேண்டிய ஒன்றென ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார். (ச)

## நீரியல்வள அமைச்சு பணிப்பாளர் யாழ். வருவார்

(துன்னாலை)

கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சின் பணிப்பாளர் பியதாவு எதிர்வரும் 22 ஆம் திகதி யாழ். குடாநாட்டிற்கு விஜயம் செய்யவுள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# அனர்த்த முகாமைத்துவ கூட்டத்தில் தேச நிர்மாண செயல்திட்டம் சமர்ப்பிப்பு

## பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபா வழங்க யோசனை

(கொழும்பு)

தேசத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான செயற்றிட்டத்தினை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று நடைபெற்ற அனர்த்த முகாமைத்துவ உயர்மட்டக் குழுவின் கூட்டத்தில் சமர்ப்பித்தார்.

ஜனாதிபதி தலைமையில் ஜனாதிபதி செயலகக் கட்டடத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க உட்பட ஏனைய அரசியல் கட்சிகளின் தலைவர்களும் பிரமுகர்களும் கலந்துகொண்டார்கள்.

மதத் தலைவர்கள், அரசியல்கட்சித் தலைவர்கள், சிவில் சமூகத்தின் அங்கத்தவர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோரது பெறுமதிமிக்க ஆலோசனைகள் கருத்தில் கொள்ளப்பட்ட பின்னர் இந்த செயற்றிட்டம் உடனடியாக அமுலுக்கு வரவுள்ளது.

நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு உடனடி குறுகிய மற்றும் நீண்டகாலத் திட்டங்கள் இந்த செயற்றிட்ட ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

சுனாமி கடற்கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஆரம்பத்தில் 5 ஆயிரம் ரூபா மாதாந்தப்படி வழங்குதல், அரச உதவியுடன் பாதிக்கப்பட்ட வீடுகளை பாதுகாப்பான இடங்களில் மீளக்கட்டியெழுப்புதல், பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலைப் புத்தகங்கள், சீருடைகள் மற்றும் உபகரணங்களை இலவசமாக வழங்குதல், பாதிக்கப்பட்டவர்களுக்கு மின்சார தொலைபேசி கட்டணங்கள் செலுத்தப்படுவதிலிருந்து விலக்களித்தல் என்பன ஜனாதிபதியால் சமர்ப்பிக்கப்பட்ட செயற்றிட்டத்தில் அடங்கியுள்ள முக்கிய அம்சங்கள் ஆகும்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சுனாமி அலை தாக்கிய தாயகப் பிரதேசங்களில் மீட்புப்பணிகள் முடிவடையும் தறுவாயில் உள்ளன

## அரசியல்துறை ப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் பேட்டி

(கிளிநொச்சி)

**அனர்த்தம் இடம்பெற்று அரை மணித்தியாலத்துக்குள்ளாகவே எங்களின் படைக்கட்டமைப்புக்கள் அனைத்தும் மீட்புப் பணியில் இறங்கிவிட்டன.தேசியத் தலைவரின் விசேட உத்தரவுக்கு அமைய சகல படை யணிகளும் கட்டமைப்புக்களும் களத்தில் இறங்கின.**



**இன்று தமிழர் தாயகத்தின் கணிசமான பகுதிகளில் மீட்புப் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன. எங்களின் முழுப் பலம், வளம் எல்லாவற்றையும் ஒருங்கிணைத்து சிறப்பாக முதற்கட்டப் பணிகளை ஆற்றிமுடித்துள்ளோம். தெற்கிலும் சில இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலும் சரியான வகையில் வேலைத் திட்டங்கள் ஒருங்கிணைக்கப்படாமல் மீட்புப் பணிகள் முழுமைப்படுத்தப்படாது இருப்பதனால் அங்கு சர்வதேச சமூகத்தின் உதவியோடு எமது போராளிகள் பணி ஆற்றுகின்றனர்.**

இவ்வாறு கிளிநொச்சியில் இடம்பெற்ற உலக உணவுத் திட்டத்தின் நிறைவேற்றுப பணிப்பாளர் ஜேம்ஸ்மொறிஸ" டனான சந்திப்பின் பின் ஊடகவியலாளர்களுக்குப் பேட்டியளித்த தமிழீழ அரசியல்துறைப பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வன் தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியின் விபரம் வருமாறு;

***கேள்வி:*** *நேற்றைய சந்திப்பு தொடர்பாக கூறுங்கள்?*

**பதில்:** ஐ.நா அமைப்பின் ஒரு அங்கமான உலக உணவுத் திட்ட நிறைவேற்றுப் பணிப்பாளர் என்ற வகையில் நேற்றைய சந்திப்பு முக்கியம் பெற்றிருந்தது. இயற்கைப் பேரனர்த்தத்தால் எமது தாயகப் பிரதேசம் பெரும் அழிவைச் சந்தித்துள்ளது.

எங்கள் மக்களின் உடனடி மனிதாபிமான நிவாரணப் பணிகள், அதனைத் தொடர்ந்து பாதிக்கபபட்ட மக்களுக்கான மீள்குடியேற்றப் பணிகள் போன்ற வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு சர்வதேச சமூகத்தின் உதவியையும் ஆதரவையும் நேரடியாகக் கோரியிருந்தோம்.

அந்த வகையில் ஐ.நா அமைப்பினுடைய உயர்மட்டப் பிரதிநிதிகளும் சர்வதேச சமூகத்தின் பிரதிநிதிகளும் வருகை தந்து எங்களுடன் கலந்தாலோசிக்கின்றனர். எனனென்ன தேவைகள் உள்ளன, என்னென்ன வேலைகள் முன்னெடுக்கலாம் என்பது பற்றிய விடயங்களை வருகை தரும் பிரதிநிதிகளுடன் பரிமாறி வருகின்றோம். தொடர்ச்சியாக மக்களுக்கான மனிதாபிமானப் பணிகள், நிவாரணப் பணிகள், மீள் கட்டுமாணப் பணிகளை முன்னெடுப்பதற்கான வேலைத் திட்டங்களாகத் தான் இச்சந்திப்புக்கள் அமைந்துள்ளன.

***கேள்வி:*** *உலக உணவு ஸ்தாபனம் புலிகளின் பகுதியில் செயற்பட்டாலும் சுனாமியின் பின்பு எத்தகைய பங்களிப்பினை வழங்கி வருகின்றது?*

**பதில்:** யுத்த நெருக்கடி காலத்திலும் ஐ.நாவினுடைய கட்டமைப்புக்கள் எங்களுடன் இணைந்து சிறப்பான பணிகளைச செய்துள்ளன. உலக உணவு ஸ்தாபனமும் சிறப்பான பணிகளைச் செய்துள்ளது. தற்போது இயற்கை பேரனர்த்தத்தால் எங்கள் மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்ட நிலையில உலக உணவு ஸ்தாபனம் தனது பணிகளை அதிகரித்துள்ளது. உணவு விநியோகம், நிவாரணங்களை வழங்குதல் ஆகிய வேலைத் திட்டங்களை விரிவாக்கம் செய்துள்ளது.

***கேள்வி:*** *இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து, தற்போது சொந்த இடங்களுக்குத் திரும்பியுள்ளவர்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்கப்படுகின்றனவா?*

**பதில்:** எல்லா இடங்களிலும் முழுமையாகப் பாதிக்கப்பட்ட மக்கள் தொழில் வாய்ப்புக்களை இழந்துள்ளனர். இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு தொழில் வாய்ப்பினை இழந்தவர்களுக்கு உலக உணவு ஸ்தாபனம் நிவாரணப் பொருட்களை வழங்கிவருகின்றது.

***கேள்வி:*** *இலங்கை அரசாங்கம் மேற்கொள்கின்ற நடவடிக்கைகளுக்கும் விடு தலைப் புலிகளின் அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்கும் ஏதாவது தொடர்புகள் உள்ளனவா?*

**பதில்:** இதுவரை எதுவும் இல்லை. தறபோது அரசாங்க அதிபர்கள ஊடாக ஓரளவு நிவாரணப் பொருட்களும் உதவிகளும் வந்து சேர்ந்துள்ளனவே தவிர, சர்வதேச சமூகம் அரசுக்கு அளித்து வரும பாரிய உதவிகள் எவையும் தமிழர் தாயகப் பிரதேசத்துக்கு திருப்பப்பட்டதாகவோ அல்லது பகிர்ந்தளிக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் ஆக்கபூர்வமான முறையில் செய்யப்பட்டதாகவோ இதுவரை எங்களுக்கு எதுவும் தெரியவில்லை.

***கேள்வி:*** *செயலணிக் குழுவில்விடுதலைப் புலிகள் அங்கம் வகிப்பார்கள் என சந்திரிகா தெரிவித்திருந்தது தொடர்பாக?*

**பதில்:** அது வெறும் அறிவப்பாக உள்ளதே தவிர அதற்கான நடைமுறை ஒழுங்கோ ஏற்பாடுகளோ இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

***கேள்வி:*** *தென்னிலங்கைப் பகுதியில் வெளிநாட்டுப் படைகள் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளன. உங்கள் பகுதியில் மீட்புப் பணி செய்ய கோரிக்கை விடுத்துள்ளார்களா?*

**பதில்:** அனர்த்தம் இடம் பெற்று அரை மணித்தியாலத்துக்குள்ளாகவே எங்களின் படைக்கட்டமைப்புக்கள் அனைத்தும் மீட்புப் பணியில் இறங்கிவிட்டன. தேசியத் தலைவரின் விசேட உத்தரவுக்கு அமைய சகல படையணிகளும் கட்டமைபபுக்களும் களத்தில் இறங்கின.

இன்று கணிசமான பகுதிகளில் மீட்புப் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன. எங்களின் முழுப்பலம், வளம் எல்லாவற்றையும் ஒருங்கிணைத்து சிறப்பாக முதற்கட்டப் பணிகளை ஆற்றி முடித்துள்ளோம். தெற்கிலும் சில இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலும் சரியான வகையில வேலைத் திட்டங்கள் ஒருங்கிணைக்கப்படாமல் மீட்புப் பணிகள் முழுமைப்படுத்தப்படாது இருப்பதனால் அங்கு சர்வதேச சமூகத்தின் உதவியோடு அப்பணிகளை ஆற்றுகின்றனர்.

எங்களுடைய தாயகப் பிரதேசத்தில் ஆளணி வளம் மற்றும் மக்களின் ஒத்துழைப்பு பெருமளவில் இருப்பதால் மீட்புப் பணிகளை சிறப்பாகச் செய்து கொண்டிருக்கின்றோம். ஏனைய தொண்டு நிறுவனங்களிடம் இருந்து தொழில்நுட்ப உதவிகளையும் உபகரண உதவிகளையும் தான் கோரியிருந்தோம். சில இடங்களில் அவ்வுதவிகள் கிடைத்துள்ளன. கிடைக்கும் உதவிகளை வைத்துக் கொண்டு மீட்புப் பணிகளை ஆற்றி வருகின்றோம்.

***கேள்வி:*** *நோர்வே பிரதமரின் பயணத்தின் போது என்ன விடயங்கள் வெளிவரலாம்?*

**பதில:** நோர்வே உயர்மட்டத் தூதுக்குழு ஒரு மனிதாபிமானப் பயணத்தை மேற்கொள்கின்றது. சமாதான முயற்சிகளில் அனுசரணையாளர்கள் என்ற வகையில் அவரது பயணம் முக்கியத்துவம் பெற்றதாக இருந்தாலும், நோர்வே உயர்மட்டக் குழுவின் பயணம் மனிதாபிமான நோக்கத் தோடும் பாதிக்கப்பட்ட மக்களை நேரடியாகச் சந்தித்து ஆறுதல் கூறுவதாகவும் உதவித்திட்டங் களை ஒழுங்குபடுத்திக் கொள்வதாகவும் இப்பயணம் அமையும் என நாம் இதுவரை அறிந்துள்ளோம்.

***கேள்வி:*** *இயற்கை அனர்த்தத்தின் பின் உருவான புலிகளுக்கும் அரசுக்கும் இடையே நம்பிக்கையை ஏற்படுத்து வதற்கான வாய்ப்பு நழுவியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றதே?*

**பதில்:** இயற்கை அனர்த்தத்தின் ஆரம்பத்திலேயே எங்களின் தலைமைப்பீடம் பகிரங்கமான அழைப்பினை விடுத்திருந்தது. மனிதாபிமான நெருக்கடி, மனிதப் பேரழிவில் இருந்து மீள்வதற்கு எங்களுடன் இணைந்து பணியாற்ற அரசு முன்வர வேண்டும் என நேசக்கரம் நீட்டியிருந்தோம்.

ஆனால், அரசு ஆரம்பத்தில் சாதகமான சில அறிக்கைகளை விடுத்திருந்ததே தவிர, நடைமுறைச் சாத்தியமான எந்த ஒழுங்கமைப்புக்களையும் ஏற்படுத்திக் கொள்ள முன்வரவில்லை. வழமை போல அறிக்கைகள் போலவே எல்லாம் அமைந்தன. நம்பிக்கைகளை கட்டியெழுப்புகின்ற எந்த செயற்பாடுகளும் இடம் பெறவில்லை. இதுதான் தற்போதைய நிலைமை எனத் தெரிவித்தார். (ப-4,9)

## ரணில் காலிக்கு விஜயம்

(காலி)

நாட்டில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தில் இருந்து மீள்வதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவது அவசியம் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சுனாமி பேரலை குறிப்பிட்ட ஒரு சமூகத்தை அல்லாது சகல சமூகத்தினரையும் பாதித்துள்ளதை அனைவரும் உணர வேண்டும் எனவும் அவர் மேலும குறிப்பிட்டார்.

காலி மாவட்டத்தில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நேற்றுமுன்தினம் ரணில் விக்கிரமசிங்க விஜயம் செய்தார்.

அங்கு வைத்து மக்கள் மத்தியில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கு அரசியல் இலாபங்களைக் கருத்தில் கொள்ளாது நியாயமாகச் செயற்பட வேண்டும். அதுவே மக்களுக்கும் நாட்டிற்கும் நல்லது என அவர் மேலும் அங்கு தெரிவித்தார். (ற-4)

## உலக உணவுத் திட்டத்தினர் வடமராட்சி வடக்கிற்கு விஜயம்

(மருதங்கேணி)

வடமராட்சி வடக்குப் பிரதேச கரையோரத்தில் சுனாமி அனாத்தங்களால் சேதமடைந்த பகுதிகளை உலக உணவு நிறுவன அதிகாரிகளும் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் குழுவும் சென்று பார்வையிட்டனர்.

தொண்டைமானாறு தொடக்கம் மணற்காடு வரையான பகுதிகளை பார்வையிட்ட இக் குழுவினர் வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சமாசத்திற்கு சென்று சகல விபரங்களையும் கேட்டறிந்தனர்.

பின் இக்குழுவினர் வடமராட்சி கிழக்கு பகுதிகளை சென்று பார்வையிட்டுள்ளனர். (ப-35)

## இந்து-யூனியன் துடுப்பாட்டம் சமநிலையில் முடிவடைந்தது

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்கும், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணிகளுக்கிடையிலான கிரிக்கெற் போட்டி கடந்த 15 ஆம் திகதி யூனியன் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் யாழ்ப்பாணக் கல்லூரி அணிசார்பாக வி.நிருபரன்-42 ஓட்டங்களையும், செந்தூரன்-30 ஓட்டங்களையும் பெற்றனர்.

இதில் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யூனியன் கல்லூரி அணி 121 ஓட்டங்களுக்கு 9 விக்கெற்றுக்களை இழந்துள்ளது.

யூனியன் கல்லூரி அணி சார்பாக பிரசாத்-45 ஓட்டங்களைப் பெற்றார்.

யாழ்ப்பாணக் கல்லூரி அணி சார்பாகப் பந்துவீச்சில் ஞ.தனாரன் 4 விக்கெற்றுக்களைப் பெற்றார்.இப்போட்டி சமநிலையில் முடிவுற்றது.

(ப-39,9)

## திருட்டு

(கோண்டாவில்)

கல்வியங்காடு விளையாட்டரங்கு வீதியில் உள்ள காளி கோவில் உண்டியல் திருடப்பட்டுள்ளது.

இச் சம்பவம் கடந்த 15 ஆம் திகதி இரவுவேளை இடம் பெற்றது.

(ப-130,9)

# அழிந்துபோன தேசத்தை கட்டியெழுப்ப நிதிப்பங்களிப்புகளை வழங்க முன்வருக!

## யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவை அழைப்பு

(யாழ்ப்பாணம்)

***சுனாமி கடற்பேரனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட கரையோரப் பிரதேசமக்களின் வாழ்வை மீளக் கட்டியெழுப்புவதற்கான நிதிப் பங்களிப்புகளை வழங்க முன்வருமாறு தேசிய எழுச்சிப் பேரவையினர் அழைப்பு விடுத்துள்ளனர்.***

***இது குறித்து தேசிய எழுச்சிப் பேரவையின் யாழ்.மாவட்ட ஊடகப் பேச்சாளர் ப.கனகலிங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,***

தமிழீழத் தேசியத்தலைவரின் வழிகாட்டலுக்கு அமைவாக தமிழீழ மக்களின் அமைப்பாக தேசிய எழுச்சிப் பேரவை உருவாக்கப்பட்டுள்ளது. இது தமிழ் மக்களது அரசியல், சமூக, பொருளாதார வளர்ச்சிக்காக மக்கள் பங்கேற்கும் அமைப்பாகும்.

அடித்தளத்தில் ஊரக அமைப்பையும், தேசிய அமைப்பை அதிஉச்ச அவையாகவும் கொண்டு தமிழ் மக்களது வாழ்க்கை மேம்படுத்தலை இலக்காக வரித்து தேசிய எழுச்சிப் பேரவை இயங்குகின்றது.

கடந்த 26.12.2004 அன்று ஏற்பட்ட இயற்கை அனர்த்த பேரிடர்களினால் ஏராளமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் வாழ்க்கைக்குரிய அனைத்தையும் இழந்து விட்டவர்கள். தேசிய எழுச்சிப் பேரவை மக்கள் அமைப்பு என்ற வகையில் இப்பேரிடரின் பின்விளைவுகளிலிருந்து மக்களைப் பேணிக்காப்பதும் நம்பிக்கை ஒளியூட்டுவதும் தேசிய எழுச்சிப் பேரவையின் பாரிய பொறுப்பாகும்.

அப்பொறுப்பை சீரியதாக முன்னெடுக்க நிதி மிகவும் அவசியமானது. இயற்கை அனர்த்தப் பாதிப்பு துயர்துடைப்பு நிதியம் யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையினால் இந்நோக்குடனேயே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தேசிய எழுச்சிப் பேரவையின் இறுக்கமான நிதிக்கட்டுப்பாட்டு முறைமைகளினால் வரையறுக்கப்பட்டுள்ள நடைமுறைகளின் ஊடாக இந்நிதிசேகரிப்பு செயற்படுத்தப்படுகின்றது.

சுனாமி பேரலையால் பேரிடருக்கு ஆளான தமிழ் மக்களது துயரங்களைத்தாங்கி அவர்களுக்கான எதிர்கால வாழ்க்கையை அமைத்துத்தருவது இங்குள்ள மக்களினதும், புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் எம் இனிய உறவுகளதும் கடமையாகும்.

எனவே, யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவை அனைத்துத் தமிழ் மக்களது நிதிப்பங்களிப்பை வரவேற்கிறது.

உங்கள் நிதிப்பங்களிப்பை ஏற்றுக்கொள்வதற்காக 'இயற்கை அனர்த்த துயர் துடைப்பு நிதியம்' ஒன்றை யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை ஆரம்பித்துள்ளது.

இந் நிதியத்தின் கணக்கு 'மக்கள் வங்கி, பிரதான வீதி, யாழ்ப்பாணக் கிளையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. கணக்கு இலக்கம் 107- 012026 ஆகும்.

அதேபோன்று நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச்சங்க கூட்டுறவு கிராமிய வங்கியிலும் கணக்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதன் கணக்கு இல.11719 ஆகும்.

மேற்படி இக்கணக்கு இலக்கங்களில் உங்கள் நிதிப்பங்களிப்பை செலுத்தலாம்.

அதேவேளை, உங்கள் பிரதேசதேசிய எழுச்சிப் பேரவை அலுவலகங்களில் அமைந்துள்ள கருமபீடங்களிலும் உங்கள் நிதிப் பங்பளிப்பை செலுத்தி நிதியத்தில் இணைந்து கொள்ளலாம்.

உறவிழந்த, உடைமையிழந்த உங்கள் உறவுகளுக்கு கை கொடுங்கள். இதுவரை 'நிதியத்திற்கு' ரூபா இருபது இலட்சம் வரை சேர்ந்துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம் என்றுள்ளது. (ப)

# அழிந்து போன இலங்கையைக் கட்டியெழுப்ப ஆசிய அபிவிருத்தி வங்கி சகல வழியிலும் உதவும்

## ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் ரடாஓசினோ உறுதி

(கொழும்பு)

சுனாமி பேரலைத் தாக்கத்தி




னால் பாதிக்கப்பட்ட இலங்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி சகல உதவிகளையும் வழங்கும் என அதன் தலைவர் ரடாஓசினோ தெரிவித்துள்ளார்.பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இச சந்திபின் போது இப் பேரலைத் தாக்கத்தினால் இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவிகளை வழங்குவதற்குத் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள ஜனாதிபதி, பிரதமர், சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் கட்சிகள் எடுத்த துரித நடவடிககைகளைப் பாராட்டுவதாகத தெரிவித்தார்.

இவர்கள் தமது கடமைகளை சரிவரச் செய்து நாட்டைமீண்டும் கட்டியெழுப்பும் பணியில் விரைவாக செயற்பட்டுவருகின்றமை சர்வதேசத்தை வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

நீண்டகால, குறுகியகால புனரமைப்பு மற்றும் புனர்நிர்மாண வேலைகளுக்காக 20 கோடி அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு வழங்கவும் ஆசிய அபிவிருத்தி வங்கி உத்தேசித்திருப்பதாகவும் தெரிவித்த ரடாஓசினோ பாதிக்கப்பட்ட பகுதிகளின் கட்டுமாண நடவடிக்கைகளுக்கு எதிர்காலத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவி வழங்குவ்து பற்றி ஆராய்ந்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ப-4)

# எழிலன் மீது படையினர் சோதனை தமிழ் மக்கள் பேரவை கண்டனம்



தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.எழிலனிடம் சிங்கள இராணுவம் நடத்திய கெடுபிடி சோதனைகளுக்கு திருமலை தமிழ் மக்கள் பேரவை கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

தமிழ் மக்கள் பேரைவையின் தலைவர் வ.விக்னேஸ்வரன் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை கட்டைபறிச்சான் மகிந்தபுரம் இராணுவ முகாம்களில் நிலை கொண்டுள்ள படையினர் எழிலனின் வாகனத்தைத் தொடர்ந்து நிறுத்தி மன உளைச்சல் ஏற்படும் விதத்தில் கெடுபிடியாக நடந்து கொண்டுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் என்று தெரிந்திருந்தும் திட்டமிட்டு இச்செயலை தொடர்ந்து நடாத்துவதானது சமாதானத்திற்கு எதிரான செயற்பாடாகவே கருதுகின்றோம்.

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள மேற்குறிப்பிடப்பட்ட இராணுவ முகாம்களில் மட்டும் இவ்வாறான செயலைச் செய்பவர்கள் இனங்காணப்படுவது மிகவும் இலகுவானது.

எனவே, இராணுவத் தளபதி மேற்படி இராணுவ முகாம்களில் உள்ளவர்கள் மீது உடனடி விசாரணை மேற்கொள்ள வேண்டும். இனிமேலாவது இவ்வாறான சமாதானத்திற் கெதிரான செயற்பாடுகள் நடைபெறுவதனை தடுத்து நிறுத்த வேண்டும். தமிழீழ விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் மீது நடாத்தப்படும் திட்டமிட்ட விசமத்தனமான இந்நடவடிக்கை திருகோணமலை மாவட்டத்தின் சகல தமிழ் மக்களுக்கும் எதிரான நடவடிக்கையாகவே கருதுகின்றோம் என்று அவர் அந்த அறிக்கையில் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார். (ப-4)

# அரச நிறுவனங்கள் மாத்திரமே நிவாரண நிதியில் மோசடியா?

## இல்லவே இல்லையென்கிறார் விமல்

(கொழும்பு)

சுனாமி கடற்பேரழிவு காரணமாகப் பாதிப்படைந்தவர்களின் புனர்வாழ்வுக்காகக் கிடைக்கப்பெறும் பாரிய நிதியினை அரச நிறுவனங்கள் உரிய முறையில் பயன்படுத்துவதில்லை என பரவலாகக் குற்றஞ்சாட்டப்பட்டு வருகின்றது.

ஆனால், அரச சார்பற்ற நிறுவனங்களின் நடவடிக்கைகள் பற்றிய விபரங்கள் குறித்து எந்தவித குற்றச்சாட்டுக்களும் வெளியாகவில்லை என ஜே.வி.பியின் பிர



சாரச் செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் முகவர் நிறுவனமாகத் தொழிற்படும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்குப் பல அரசசார்பற்ற நிறுவனங்கள் தொடர்ச்சியாக நிதி மற்றும் பொருட்களை வழங்கி வருகின்ற போதிலும் அது குறித்த குற்றச்சாட்டுகள் எதுவும் வெளியாகவில்லை.

இது குறித்து சட்டரீதியாக நடவடிக்கை எடுப்பதற்கான சட்டங்கள் நாட்டில் இல்லை எனவும் அவ்வாறு சட்டங்கள் இருந்திருப்பின் தமிழீழ விடுதலைப் புலிகளினதும், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினதும் கபட நாடகத்தை சர்வதேச நாடுகளுக்கு வெளிக்காட்டியிருக்க முடியும் எனவும் விமல் வீரவன்ச மேலும் தெரிவித்தார்.(ரு-4)

# சுனாமியினால் யாழ்.மாவட்டத்தில் 1240 பேர் காணாமல் போயினர்

## 1256 பேர் உயிரிழந்தமை உறுதிப்படுத்தப்பட்டது

(யாழ்ப்பாணம்)

சுனாமி அனர்த்தத்தினால் யாழ்.மாவட்டத்தில் ஆயிரத்து 256 பேர் இறந்துள்ளதாக யாழ். மாவட்டச் செயலகத்தின் இறுதிப் புள்ளிவிபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஆயிரத்து 647 பேர் கடும் காயங்களுக்கு உள்ளானதுடன் ஆயிரத்து 240 பேர் காணாமல் போயுள்ளார்கள் எனவும் அப்புள்ளி விபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனர்த்தத்தினால் வைத்தியசாலைகளில் 14 பேரும், கீரிமலையில் 17 பேரும் இறந்துள்ளனர். காரைநகரில் 2 பேர் இறந்துள்ளதுடன் 8 பேர் காயமடைந்துள்ளனர்.

மருதங்கேணி பிரதேச செயலகத்திற்குட்பட்ட பிரதேசத்தில் ஆயிரத்து 111 பேர் இறந்துள்ளதுடன் 880 பேர் காயமடைந்துள்ளனர்.

இதேவேளை, இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் வசிப்பவர்களுக்கு மூன்றுநேர சமைத்த உணவு வழங்கப்படுகிறது.

பாதிக்கப்பட்டவர்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்கள் வீடுகளில் தங்கிவருபவர்களுக்கும் தொழில் ரீதியாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கும், உலர் உணவுப் பொருட்களும் யாழ்.மாவட்ட செயலகத்தால் தொடர்ந்தும் வழங்கப்பட்டுவருவதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கருணன் தெரிவித்துள்ளார். (ச-19)

# ஆசிய அபிவிருத்தி வங்கித் தலைவர் திருமலை நிலைமைகளை ஆராய்வு

(திருகேணமலை)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் ரடாஓ சினோ திருகோணமலைக்கு நேற்று முன்தினம் பயணம் மேற்கொண்டார்.

நேற்றுமுன்தினம் காலை 10.50 மணியளவில் திருகோணமலை ஜயசுமணராமய விகாரைக்கு சென்று அங்குள்ள பாதிக்கப்பட்ட சிங்கள மக்களையும், பின்னர் அலஸ்தோட்டம் ஏதிலியர் முகாமிற்குச் சென்று பாதிக்கப்பட்ட தமிழ் பேசும் மக்களையும், ஜமாலியா முஸ்லிம் மகாவித்தியாலயத்திற்குச் சென்று முஸ்லிம் மக்களையும் நேரில் பார்வையிட்டார்.

இவர்களுடன் வடக்கு-கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.ரங்கராஜு, நிக்கொட் மாகாணப் பணிப்பாளர் அ.லங்காநேசன், பட்டணமும் சூழலும் பிரதேச செயலாளர் சுந்தரம் அருமைநாயகம், நிகொட் பிரதிப் பணிப்பாளர் ந.புகேந்திரன் ஆகியோரும் சென்றிருந்தனர்.

இதன் பின்னர் வடக்கு-கிழக்கு பிரதம செயலாளர் அலுவலகத்தில் நிக்கொட் அமைப்பினால் வழங்கப்பட்ட 2 உழவு இயந்திரங்ளை ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் பிரதம செயலாளர் ரங்கரஜாவிடம் கையளித்தார்.

இவ் உழவு இயந்திரங்கள் சேருவல பிரதேச சபைக்கும், கிண்ணியா பிரதேச சபைக்கும் வழங்கப்படவுள்ளது. உழவு இயந்திரங்கள் கையளிப்பு வைபவத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கித் தலைவர் பேசுகையில் பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பாதிப்புக்குள்ளான மக்களின் வீட்டுத் தேவையினை ஆசிய அபிவருத்தி வங்கி நிறைவு செய்யவுள்ளது. இம்மக்களின் புனர்வாழ்வுக்குத் தேவையான நிதி வசதிகளை நாங்கள் வழங்கவுள்ளோம் எனத் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து அவரது குழுவினர் மூதூர் பகுதிக்கும் சென்று பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்தனர். (த-4)

# இன்று ஒரு தகவல்

## மருத்துவரின் மன இறுக்கம்

என்னுடன் படித்த ஒருவர் இப்போது மருத்துவராக இருக்கிறார். அவரைப் பார்த்து விட்டு வரலாம் என்று ஒருமுறை சென்றிருந்தேன். அப்போது எனக்கும் உடல்நிலை சீரில்லை... அதைச் சொல்லி ஏதாவது குளிசை வாங்கிக் கொண்டு வரலாம் என்று நினைத்துக் கொணடு போனேன். போய் "உடல் வலிக்கு ஏதாவது மருந்து தந்தால் பரவாயில்லை" என்றேன். அவர் உடனே "மூட்டுவலி அதிகமுள்ளதா?" என்று கேட்டார். 'ஆமாம்' என்றேன். காலையில் படுக்கையை விட்டு எழும்பும் போது தலை சுற்றுவது போலிருக்கிறதா?" என்றார். 'ஆமாம்' என்றேன். "சாப்பாட்டைப் பார்த்தாலே வெறுக்கிறதா?" என்றார். "ஆமாம் நீங்கள் சொல்வதெல்லாம் மிகவும்சரி. அது எப்படி இவ்வளவு நுணுக்கமாக உங்களால் கண்டுபிடிக்க முடிந்தது?" என்று கேட்டேன். "வேறு ஒன்றுமில்லை. அதே குணங்கள் எனக்கும் இப்போது இருக்கிறது. அதுதான் அவ்வளவு சரியாகச் சொன்னேன்" எனக் கூறிவிட்டு எழுந்து சென்று நான்கு குளிசைகளை எடுத்து வந்தார். என்னிடம் இரண்டைத் தந்துவிட்டு அவர் இரண்டைக் குடித்தார்.

மருத்துவர் என்பதனால் வியாதிகள் விலகிப்போய் விடுவதில்லை. டாக்டர்களுக்கு ஏற்படும் மன இறுக்கம் பல நேரங்களில் அவர்களுடைய ஆரோக்கியத்தையே பாதித்துவிடும். இதைப்பற்றியெல்லாம் கூட வெளிநாடுகளில் சில ஆராய்ச்சிகள் நடக்கின்றன. இங்கிலாந்து நாட்டில் ஒரு புள்ளிவிபரம் எடுத்தார்களாம். அங்கே பொதுமக்களை விட டாக்டர்களிடம் தான் தற்கொலை வீதம் அதிகமாக உள்ளதாம். மதுவினால் கல்லீரல் அழற்சி ஏற்படும் வீதமும் அதிகமாக இருக்கிறதாம்.

மருத்துவரின் உடல்நலம் கெடுவதற்கு முக்கியமான காரணமாக இருப்பது மன இறுக்கம் தான். விளம்பர நிறுவனங்களில் வேலை செய்பவர்கள், பத்திரிகையாளர்கள், பொலிஸ் அதிகாரிகள், விமானிகள் ஆகியோருக்கு அடுத்ததாக மன இறுக்கத்துக்கு அதிகமாக ஆளாகுபவர்கள் மருத்துவர்கள்தானாம். சாகக் கிடக்கும் நோயாளிகளை எப்படியாவது பிழைக்க வைத்து விட வேண்டும் என் பதற்காக உணவைக் கூட மறந்து இரவு பகலாகக் கண் விழித்து உடகார வேண்டியுள்ளது. மன இறுக்கம் வராமல் இருக்குமா? பாதி இரவில வந்து கதவைத் தட்டுவார்கள்எழுந்து வந்து என்னவென்று கேட்டால் "உடனே வாருங்கள் டாக்டர். அங்கே ஒருவர் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறார்" என்பார்கள்.

சில பேர் நடு இரவில் மருத்துவரின் வீட்டுக்குத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு "வயிறு வலிக்கிறது டாக்டர் என்ன செய்யலாம் சொல்லுங்கள்" என்று கேட்பார்கள். இவரும் "அவசரத்திற்கு இரண்டு அஸ்பிரின் குளிசையைப் போடுங்கள்" என்று பதில் சொல்வார். அவர் உடனே டாக்டர் சொல்வது போல இரண்டு குளிசைகளைப் போட்டுக் கொண்டு நிம்மதியாகத் தூங்கி விடுவார். ஆனால் இங்கே இவருக்கு தூக்கம் வராது. ஏன் தெரியுமா? "அந்த ஆள் வயிறு வலிககிறது என்று சொன்னாரே வயிற்றில் ஏதாவது கட்டியாக இருக் குமோ? இல்லையென்றால் வேறு ஏதாவது பெரிய கோளாறாக இருக் குமா? அஸ்பிரின் அவருக்கு வேறு ஏதாவது பெரிய ஆபத்தை உண் டாக்கி விடுமா?" என்றெல்லாம் நினைத்து இரவு முழுதும் உறங்க மாட்டார்.

ஜோன்ஹெவி என்ற ஒருவர் இங்கிலாந்து எடின்பரோ பல்கலைக்கழகத்தில் பொது மருத்துவத்துறைப் பேராசிரியராக இருந்தார். இவர் நிறைய ஆய்வுகளைச் செய்துள்ளார். பொது வைத்தியம் செய்யும் மருத்துவர்களுக்கு மன இறுக்கத்தை உண்டாக்கும் சில காரணங்களை அவர் கண்டுபிடித்திருக்கிறார். தன்னால் இயலுவதைவிட அதிகமான எண்ணிக்கையில் நோயாளிகளுக் குச் சிகிச்சையளிப்பதும் ஒரு காரணம். தொந்தரவு செய்யும் நோயாளிகளும் ஒரு காரணம். சக பணியாளர்களிடம் எரிச்சலபடுவது இன்னுமொரு காரணம். தாமதங்கள், இடையூறு கள போன்றவற்றால் கோபம் அடைவது இன்னுமோர் காரணம்.

இவற்றைக் கண்டுபிடித்துச் சொல்லும் அந்தப் பேராசிரியர் டாக்டர்களுக்கு என்ன யோசனை சொல்கிறார் தெரியுமா? "இடையூறுகள், தாமதங்கள் போன்றவை இருக்கத்தான் செய்யும் தவிர்க்க முடியாது. அதனால் மருத்துவர்கள் தமது பணியில் எதிர்பார்க்க முடி யாத சூழ்நிலைகள் ஏற்படத்தான் செய்யும் என்பதை மனதார ஒத் துக் கொள்ளவேண்டும். அப்படி ஒத்துக்கொண்டு அதனால் சமநிலையை இழக்காமலிருக்க பழகிக் கொள்ளவேண்டும் என்கிறார்.

அனுபவம உள்ள மூத்த பொது வைத்தியர்கள், இளைஞர்கள் போல் அவ்வளவு அதிகமான நெருக்கடிகளால் பாதிக்கப்படுவதில்லை. ஜென்னி என்று ஓர் உளவியல் டாக்டர் 170 இளம் டாக்டர்கள் பணியில் படிப்படியாக முன்னேறிக்கொண்டு வருவதை கண்காணித்து வந்தார். அவர்களுக்குக் கடுமையான மன இறுக்கம் உண் டாவதற்கு என்ன காரணம் என்றும் கண்டுபிடித்தார்.

நோயாளி இறப்பது, இறக்கும் நிலையில் இருப்பது, மூத்த மருத்துவர்களிடம் சுமுகமான உறவு இல்லாமல் போவது, தவறு செய்வது, கடின வேலை, தூக்கமின்மை போன்றவை இளம் மருத்துவர்களுக்கு கூடிய மன இறுக்கத்தை உண்டாக்குவதாக அவர் கண்டுபிடித்திருக்கிறார். பணியில் சேர்ந்து மூன்று வருடத்தின் பின இது படிப்படியாகக் குறைந்து விடுவதாகவும் அவர் கண்டுபிடித்திருக்கிறார்.

இதுவரை கூறியதெல்லாம் இருக்கட்டும் நமது ஊரில் மருத்துவர்களின் மன நிலையை மாற்றுவது நோயாளிகள்தான். சிலர் தனக்கு என்ன வியாதியென்பதையே கூறமாட்டார்கள். டாக்டர் கண்டுபிடிக்கட்டும் என்று ஓர் நினைப்பு. இப்படிப்பட்ட ஒருவர் ஒரு டாக்டரிடம் வந்தார். 'உடலுக்கு என்ன செய்கிறது' என்று கேட்டார் டாக்டர். அதை நீங்கள் தான் கண்டுபிடித்து மருந்து கொடுக்க வேண்டும் என்றார் இவர்.

இதைக் கவனித்த வேறு ஒருவர் சொன்னார் "இதோ பாரப்பா உடம்புககு என்ன என்பதை டாக்டரிடம் கூறி ஒத்துழைத்தால் தான் சிகிச்சை தர வசதியதாக இருக்கும். நோயாளியிடம் எதுவும் கேட்காமல் வைத்தியம பார்க்க வேண்டுமானால் அடுதத தெருவில் ஒரு மருத்துவமனை உள்ளது" அங்கே போ என்றார். அது எந்த ஆஸ்பத்திரி என்று ஆர்வமாகக் கேட்டார் இவர். "மிருக வைத்தியசாலை" என்றார் அவர்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுள் மீண்டும் கட்சிபேதம் வலுவடைகிறது

(கொழும்பு)

ஜே.வி.பிக்கும் சந்திரிகாவின் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிக்கும் இடையில் மீண்டும முறுகல் நிலை தோன்றியுள்ளதாகத் தொிவிக்கப்படுகிறது.



அண்மைய ஆழிப் பேரலை அனர்த்தத்தின் பின்னர் அரசாங்கத்தின் நடவடிக்கைகளை நேரடியாகவே ஜே.வி.பி விமர்சித்து வருகிறது.

அரச நிர்வாகம் உரிய முறையில் இயங்கவில்லை என அந்தக் கட்சி குற்றம் சுமத்தி வருகிறது.

பல இடங்களில் ஜே.வி.பி தம்மை அரசாங்கத்தை சாராத தனியான கட்சியாக காட்டிக்கொண்டு நிவாரணப் பணிகளில் ஈடுபட்டு வருகிறது.

அதேநேரம் அண்மையில் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் இலங்கைக்கு வருகை தந்திருந்த போது, இடம்பெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் ஜே.வியியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க காட்டிய இனவாதப் போக்கையடுத்தே இந்த முறுகல் நிலை மீண்டும் ஏற்பட்டுள்ளது.



இந்த நிலையில் அரசாங்க இலத்திரனியவியல் மற்றும் அச்சு ஊடகங்களில் ஜே.வி.பியின் பிரசாரங்களைக் குறைக்குமாறு ஜனாதிபதி தரப்பில் இருந்தே அதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

# அவசர காலச் சட்டம், ஆயுதக் கொள்வனவின் விளைவு எதிர்காலத்தில் மிகப் பாரதூரமானதாகவே அமையும்

## திருமலை தமிழ் மக்கள் பேரவை எச்சரிக்கை

(திருகோணமலை)

ஆழிப்பேரலை அனர்த்தம தாரணமாக மக்கள் துயரத்தில் துடிக்கும் இவ்வேளையில், அரசின் அவசரகாலச் சட்ட பிரகடனமும், ஆயுதக் கொள்வனவும் ஆபத்தை விளைவிக்கும் செயலாகவே அமையும் என்று திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவையின் தலைவர் வ.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கை ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, அரசானது வடக்கு- கிழக்கு தமிழர் தாயகப் பகுதிகளில் நிவாரணப்பணிகளை தமது கட்டுப்பாட்டுக்குள கொண்டு வரும் நோக்கில் அவசரகாலச் சட்டத்தை பிரகடனப்படுத்தி வடககு-கிழக்கை இராணுவ மயப்படுத்தி வருகின்றது. இதுவரையிலும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் பராமரிக்கப்பட்ட பாதிக்கப்பட்டோர் காப்பகங் களுள் இராணுவத்தினர் பலாத்காரமாகப் புகுந்துள் ளமை கறையான் புற்றுக்குள் கருநாகம் குடிகொண்ட கதையே ஆகும்.

வடக்கு- கிழக்கு மக்களுக்கு வெளிநாடுகளால் நேரடியாக வழங்கப்படும் உதவிகளை தடுத்து நிறுத்துவதே அவசரகால பிரகடனத்தின் உள்நோக்கமாகவுள்ளது. அதுமட்டுமன்றி நாட்டு மக்கள் துயரத்தால் துடித்துக் கொணடிருக்கும் இவ்வேளையில் ஆயுதக் கொள்வனவிற்காக படையதிகாரிகள இராணுவத் தளபதியின் தலைமையில் ஈரானுக்கு சென்றிருப்பதனை அரசாங்கம் சமாதான முயற்சிகளைப் புறந்தள்ளி விடடு யுத்தத்திற்கு தம்மை தயார்படுத்தும் செயலாகவே நாங்கள் கருதுகின்றோம்.

ஆழிப்பேரலையால் அளவிட முடியாத துன்பத்தை சுமநது கொண்டிருக்கும் வடக்கு-கிழக்கு மக்கள் தமது சுதந்திரத்திற்கான போராட்டத்தை மறந்த விடமாட்டார்கள். துன்பம் எமக்குப் புதியதொன்றல்ல. எந்த நிலை வரினும் எமக்கு எதிரான சதி முயற்சிகளுக்கெதிராக கிளர்ந்தெழுந்து தாயகத்தின் விடுதலைக்காக தமிழீழ விடுதலைப்புலிகளுடன் எந்நேரத்திலும இணைந்து செயற்படுவார்கள் என்பதை அரசாங்கம எந்த நேரத்திலும், எவ்வேளையிலும் மறந்துவிடக் கூடாது. இயற்கை அழிவு அரசுக்குப் பெற்றுத் தந்த கொடைகளை யுதத தளபாடங்கள் வாங்கவும், அரச நிர்வாகத்தை நடாத்தவும் பயன்படுத்தினால் அதன விளைவுகள் எதிர்காலத்தில் அரசாங்கத்திற்கு மிகப்பெரிய ஆபத்தினை தேடித் தருமென எச்சரிக்கின்றோம்.

வடகத -கிழக்கில் அமுல்படுத்தியுள்ள அவசர காலப் பிரகடனத்தை அரசாங்கம் உடனடியாக விலக்கிக் கொளள வேண்டும். அவ்வாறு இன்றேல் சர்வதேச நாடுகளின் படைகளும் பிரதிநிதிகளும் எமது நாட்டில் நிவாரணப் பணியில் ஈடுபட்டிருக்கும் நிலையில் அரசின் இச் செயற்பாட்டிற்கெதிராக தமிழ்மக்கள் தமது எதிர்ப்பினை தொிவிக்க வேண்டிய நிலை ஏற்படும். அவசரகால நிலைப் பிரகடனமே தமிழீழப்போராட்டத்திறகு அததிவாரமாக அமைந்தது என்பதை அரசாங்கம என்றும் மறந்துவிடக்கூடாது எனவும் அவரால் வெளியிடப்பட்ட அந்த அறிக்கையில் மேலும் தொிவிக்கப்பட்டுள்ளது. (ந-4)

# இராசி பலன்

**18.01.2005**

**(தை 5 செவ்வாய்க்கிழமை)**

**நவமி முழுவதும்**

**அச்சுவினி பி.ப.12.34 வரை**

**இராகுகாலம் 3.35 -5.05 மணிவரை**

**சுபநேரம் 11.05 - 12.35 மணிவரை**

**அமிர்தசித்தம்**

- **மேடம்** காரிய அனுகூலம், புதிய சிந்தை, போசன சுகம், ஜனவசியம்.
- **இடபம்** பிரயாணம், உணர்ச்சிவசப்படல், காரிய தாமதம், பணவிரயம்.
- **மிதுனம்** குடும்ப மகிழ்ச்சி, எடுத்த கருமங்கள் கைகூடும், போசன சுகம், தனலாபம்.
- **கடகம்** அதிகாரம், செய்தொழில் விருத்தி, உறவினர் சந்திப்பு, நல்ல செய்தி.
- **சிங்கம்** புதிய திட்டமிடல், சரீரப் பிரயாசை, பிரயாணம், வீண் செலவு.
- **கன்னி** வீண் மனஸ்தாபம், காரிய தடங்கல், பணவிரயம், வேலைச்சுமை
- **துலாம்** எடுத்த கருமங்கள் கைகூடும், தெய்வ சிந்தை, பண வருவாய், நண்பர்கள் சந்திப்பு
- **விருச்சிகம்** தேக நலன், பெரியோர் சந்திப்பு, தொழில் முயற்சி, காரிய அனுகூல்ம்.
- **தனுசு** வியாபார சிந்தை, குடும்பக் கவலை, கடின வார்த்தை, காரிய தாமதம்.
- **மகரம்** தாய்வழி உறவு, புதிய விடயம், பணவிரயம், முயற்சி தாமதம்.
- **கும்பம்** நண்பர்கள் உதவி, எடுத்த கருமங்கள் கைகூடும், நல்ல வருவாய், கீர்த்தி
- **மீனம்** பண விரயம், கோபமான நிலை, தொழில் மந்தநிலை, காரிய தாமதம்.

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது - வளவன்

# கனேடிய பிரதமர் புலிகளின் பகுதிக்கு செல்ல வேண்டும்

## கனேடிய எதிர்க்கட்சி கோரிக்கை

(கொழும்பு)

சுனாமியினால் பாதிக்கப்பட்ட தமிழர் தாயகப் பகுதிகளுக்கு கனேடியப் பிரதமர் போல் மார்ட்டின் கட்டாயம செல்ல வேண்டும் என அந்நாட்டின் எதிர்க்கடசியான புளொக்வே கியூவே கட்சி அவரை வேண்டியுளளது.

இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளும் போல் மார்டடீன் இலங்கை அரசுடன் சேர்ந்து அரசின் பகுதிகளைப் பார்வையிடாமல் தமிழர்கள் வாழும் வடக்கு-கிழக்குப் பகுதிகளுக்கும் சென்று அவர்களின் குறைகளைக் கேட்டறியுமாறு அக்கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன், கனேடிய மக்களின் மனிதாபிமான உதவிகள் இலங்கையின் சகல பகுதிகளுக்கும் சகல மக்களுக்கும் பாகுபாடின்றி கிடைக்க வேண்டும் என்பதை நேரில் சென்று கண்டறியுமாறு அக்கட்சி கனேடியப் பிரதமரை வேண்டியுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிக்கு செல்வதற்கு கனேடியப் பிரதமர் தலைமையிலான குழுவிற்கு இலங்கை அரசு அனுமதி வழங்கவில்லை என்ற செய்தியை கனேடிய தேசியத் தொலைக்காட்சியான கனேடிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் வெளியிட்டுள்ளது.

தமது பிரதிநிதியாகச் செல்லும் கனேடியப் பிரதமர் வடக்கு-கிழக்குக்குச் சென்று தமது உறவுகளைச் சந்தித்து ஆறுதல் கூறுவதுடன் அவர்களுக்கு முழுமையான உதவிகள் கிடைப்பதை கனடா உறுதிசெய்யும என்பதை அவர்களுக்கு நேரில் தெரிவித்தாலேயே இந்தப் பயணத்திற்கான உரிய பலன்கிடைக்கும் என கனேடிய தமிழ அமைப்புக்கள் அவரிடம் நேரில் தெரிவித்ததாகவும் அத் தொலைக்காட்சி செய்தி வெளியிட்டுள்ளது. (த-4)

சுனாமி தாக்கிய இலங்கைக்கு

# மீள் கட்டுமாண உதவிகளை வழங்க 48 நாடுகள் இணங்கியுள்ளன

(கொழும்பு)

சுனாமிப் பேரலைகளினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளக்கட்டியெழுப்பி புனரமைப்பதற்கான உதவிகளை வழங்க 48 நாடுகள் இணங்கியுள்ளன.

சுனாமியினால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு உதவி வழங்குவதற்காக ஜெனிவாவில் நடைபெற்ற சர்வதேச மாநாட்டிலேயே இந்த இணக்கம் காணப்பட்டுள்ளது.

மாநாட்டில் கலந்து கொண்டு நாடுதிரும்பிய நிதியமைச்சர் சரத அமுனுகம மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய நாடுகள் சபையின் ஊடாகவும் இருதரப்பு அடிப்படையிலும் மீள்கட்டுமாண உதவிகளை வழங்க 48 நாடுகள் இணங்கியுள்ளன.

இலங்கைக்கு கடன் வழங்கியுள்ள நாடுகள் அந்தக் கடனை வழங்கத் தேவையில்லையென கூறியுள்ளன.

எமது நாட்டில் இன ஒற்றுமையை மேலும் உறுதிப்படுத்த வேண்டுமென சர்வதேச கழகம் எதிர்பார்த்துள்ளது என்றார். (ப-8,9)

# அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கு எதுவித தட்டுப்பாடும் இல்லை

(கொழும்பு)

அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்குப் பற்றாக்குறை நிலவவில்லையென நுகர்வோா் விவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவிததுள்ளார்.

இரண்டு மாதங்களுக்குத் தேவையான அரிசியும், மாவும் கையிருப்பில் உள்ளதாகவும் அவா தெரிவித்தார்.

இருந்த போதிலும், சுனாமியால் பாதிக்கப்பட்டவர்கள் மத்தியில் அத்தியாவசிய உணவுப பொருட்களுக்குத் தட்டுப்பாடு நில்வுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேவையான உணவுப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கு குறிப்பிட்ட பகுதிகளுக்கான அதிகாரிகள் குறிப்பிட்ட நடவடிக்கை எடுக்காததே இதற்கு முக்கிய காரணம் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட எந்தப் பகுதியிலாவது அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு நிலவினால் தமது அமைச்சுக்கு தெரிவிக்கும்படி அமைச்சர் கேட் டுள்ளார். (ற)

# நாட்டின் பிரச்சினைகளுக்கு உறுதியற்ற கொள்கையே காரணம்

அரச நிறுவனங்கள் தேசியக் கொள்கை ஒன்றை உறுதியாகக கைக்கொள்வது மிகவும் அவசியம் என உல்லாசப் பயணத்துறையின் பிரதியமைச்சர் அர்ச்சுண ரணதுங்க தெரிவித்துள்ளார்.

உறுதியான கொள்கைகள் இலலாததன் காரணமாகவே எமது நாடு பல பிரச்சினைகளை எதிா நோக்குக்கின்றது. காலத்திற்குக் காலம அரச நிர்வாகப் பொறுப்பை ஏறகும அரசியல்வாதிகள் நிரந்தரக கொள்கைகளைக் கடைப் பிடிப்பதில்லை.

காலத்திற்குக் காலம் பதவியேற்பவர்கள் நாட்டின் முன்னேற்றத்துக்கு முன்னுரிமை தருவதில்லை. விளையாட்டுத்துறையிலும் இதே நிலையே காணப்படுகின்றது. இதன் காரணமாகத் தேவையான விளையாட்டு வீரர்களை வெளிக கொணர முடியவில்லை என அவா மேலும் தெரிவித்தார். (ற-4)

# இலங்கை கடற்படையை மீளமைக்கிறது இந்தியா

(திருகோணமலை)

திருகோணமலையில் இலங்கைக் கடற்படையின் மீள்கட்டுமாணப் பணிகளுக்கு இந்தியா உதவியளிக்கவுளளதாகத் தெரியவந்துள்ளது.

திருகோணமலையில் அமைக்கப்பட்டிருந்த 42 கிலோமீற்றர் நீளமான பாதுகாப்பு வேலி, சுனாமி அலைகளால் அழிவடைந்திருப்பதாகவும் இந்த வேலிகளை அமைக்கும் பணிகளை இந்திய-இலங்கைக் கடற்படையினா் கூட்டாக மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கைக் கடற்படையின் விஜேயபாகு, வலகம்பா ஆகிய கடற்படை அணிகள் இப் பகுதியில் நிலை கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-4)

# தேசிய நிவாரண வேலைத் திட்டத்தின் பிரேரணைகள் ஜனாதிபதியிடம் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

சுனாமியினரல் பாதிக்கப்பட்ட பஞ்திகளுக்கான தேசிய வேலைத்திட்டம் குறித்து எதிர் கட்சியான ஐக்கிய தேசியக் கடசியும் ஜே.வி.பியும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்குத் தமது ஆலோசனைகள் குறித்த அறிக்கைகளை நேற்றுமுன் தினம் சமர்ப்பித்துள்ளன.

தேசிய வேலைத்திட்டம் குறித்து இந்த இரண்டு கட்சிகளின ஆலோசனைகளையும் ஜனாதிபதி பரிசீலிக்கவுள்ளதாக ஜனாதிபதித் தரப்புத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியின பிரேரணைகள் குறித்து, ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேசசாளர் ஜி.எல்.பீரிஸ் ஊடகமென்றுககுக் கருத்துத் தெரிவிக்கையில்,

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உடனடித் தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

பாதிக்கப்பட்ட மக்களிடம் கலந்தாலோசனை செய்த பின்னரே அவர்களின் உண்மையான தேவைகளை இனங்கண்டு அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க முடியும்.

இது குறித்து ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ள பிரேரணையில் விபரமாக விளக்கிக் குறிப்பிடப்பட்டுள்ளது என்றார். (ற-4)

# துரித கதியில் நடைபெறும் பங்கீட்டு அட்டை விநியோகம்

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் வழங்குவதற்குரிய விசேட பங்கீட்டு அட்டைகள் வழங்கும் பணி துரிதகதியில் நடைபெற்று வருகின்றது.

ஒருவருக்கு வாரத்தில் 375 ரூபாய்க்கான உணவுப் பொருட்கள் வழங்கப்படவுள்ளன.

இந்த உணவுக் கூப்பன் 24 வாரங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும் என்று அத்தியாவசிய தேவைகள் ஆணையாளர் திலக்ரணவிராஜ தெரிவித்துள்ளார்.

மாத்தறை மாவட்டத்தில் உலர் உணவுப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கான இந்த அட்டைகள் தென் மாகாண முதலமைச்சர் அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டன.

இடம் பெயர்ந்தோருக்கான சகல உணவுப் பொருட்களையும தாமதமின்றி வழங்குவதற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இதனை அடுத்து, சகல கூட்டுறவுச சங்கங்களுக்கும் உணவுப பொருட்களை விநியோகிப்பதற்கான சகல கூப்பன்களையும் வழங்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பணித்துள்ளனர்.

கூட்டுறவுச் சங்கங்கள் இல்லாத இடங்களில் நடமாடும் கூட்டுறவு சங்கங்களை அமைக்குமாறும் அவ் அதிகாரிகள் பணித்துள்ளனர். (ற)

# அம்பாறையில் உயிரிழப்பு 9,030 ஆக அதிகரிப்பு

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் சுனாமிஆழிப்பேரலை அனர்த்தத்தினால் இதுவரை உயிரிழந்தவர்களின எணணிக்கை 9 ஆயிரத்து 30 என்றும், காணாமல் போனோர் எண்ணிக்கை 2ஆயிரத்து207 என்றும் உத்தியோக பூர்வ தகவல்கள் வெளியாகியுள்ளன.

காணாமல் போனவர்கள் உயிரிழந்திருக்கலாம் என கருதப்படுகின்ற போதிலும் அவர்களுடைய மரணம் பற்றி எத்தகைய பதிவுகளும் இதுவரை இல்லை.

90 நலன்புரி நிலையங்களில 38,201 பெண்கள், 36, 607ஆணகள், 33,283 குழந்தைகள் என மொத்தம் ஒரு லட்சத்து 8 ஆயிரத்து 91 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

29ஆயிரத்து 097 வீடுகள், 82 மத வழிபாடடுத் தலங்கள், 50 பாடசாலைகள், 388 பொதுக் கட்டடங்கள் இவ் அனர்த்தத்தினால் சேதமடைந்துள்ளன.

அழிவுகளும் சேதங்களையும் பொறுத்த வரை கல்முனை முஸ்லிம் பிரதேச செயலகப் பிரிவில் கூடுதலான அழிவுகள் ஏற்பட்டுள்ளது.

அடுத்து சாய்ந்தமருது பிரதேசத்திலும் கல்முனை தமிழ் பிரதேசத்திலும் கூடுதலான அழிவுகளும் சேதங்களும் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-4)

# செய்தித் துளிகள்

## பருத்தித்துறையில் சுவரொட்டிகள்

(மருதங்கேணி)

சுனாமி அனர்த்தங்களால் பலியான உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக பருத்தித்துறை பகுதி எங்கும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

மேற்படி குறித்த அஞ்சலி சுவரொட்டிகளில் 26 டிசம்பர் 2004 என கறுப்புமையினால் தலைப்பிட்டு "அலை கடலின் ஆவேசத்தால் உயிர் நீத்த உறவுகளே உங்களுக்கு எங்கள் அஞ்சலிகள்" என குறிப்பிடப்பட்டுள்ளது. (ப-35)

## மரணம்

(மருதங்கேணி)

தனக்குத்தானே மண்ணெண்ணை ஊற்றி தீ வைத்து தீக்காயங்களுடன் சிகிச்சைக்காக யாழ்..போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 4 பிள்ளைகளின் தாயான குடுமபப் பெண ஒருவர் சிகிச்சை பயனளிக்காத நிலையில் பத்து நாட்களின் பின் மரணமானார்.

பருத்தித்துறையைச் சேர்ந்த திருமதி சிவகுமாரி பார்த்தீபன (வயது-34) என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

இவரது மரணம் குறித்து பருததித்துறை பதில் நீதவான் சபா. ரவேந்திரன் விசாரணை நடாத்தினார். (ப-35)

## செயலமர்வு

(பொன்னாலை)

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 7 வகுப்புகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு "பாடத்திட்டமும் விரிவான வேலைத் திட்டமும்" என்னும் தலைப்பிலான செயலமர்வு ஒன்று சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நாளை புதன்கிழமை பிற்பகல் 1.00மணிக்கு நடைபெறவுள்ளது. (ப-49)

## திருப்பலி

(பொன்னாலை)

குருநகர் புனித செபஸ்தியார் ஆலய வருடாந்த திருவிழாவுக்கான ஆயத்த வழிபாடுகள் கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகி தினமும் நடைபெற்றுவருகின்றது.

இவ்விழாவில் நாளை புதன்கிழமை பிற்பகல் 5 மணிக்கு நறகருணை வழிபாடும், மறுநாள் வியாழக்கிழமை காலை 6 மணிக்கு திரு நாள் திருப்பலியும் இடம் பெறவுள்ளது. (ப-49)

## சக்கர நாற்காலி வழங்கல்

(பொன்னாலை)

வலிகாமம் தெற்குப் பிரதேச செயலகம் தமது பகுதிக்குட்பட்ட வலுவிழந்த இருவருக்கு சககர நாற்காலிகள் இரண்டினை வழங்கியுள்ளது.

கடந்த வாரம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் வைத்து இப்பிரதேசத்திலுள்ள வலுவிழந்தோர் மூவருக்கு சக்கரநாற்காலிகளும், இருவருக்கு மூக்குக் கண்ணாடிகளும், ஒருவருக்கு செவிபபுல உபகரணமும் வழங்கப்பட்டிருந்தன.

சமூகநலத்துறை திணைக்களம் வழங்கிய இச் சக்கரநாற்காலிகளை வலி-தெற்கு பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் செல்வி த.மஞ்சுளாதேவி வழங்கினார். (ப-49)

## கூட்டம்

(பொன்னாலை)

தீவகம் தெற்கு-வேலணைப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக கூட்டமும் பிரதேச விவசாயக் குழுக் கூட்டமும் இன்று செவ்வாய்க்கிழமை வேலணைப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் உதவிப் பிரதேச செயலர் எஸ்.நந்தகோபலர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக கூட்டத்தில் வேலணைப பிரதேச கல்வி,விவசாய மற்றும் துறைசார் அபிவிருத்திகள் குறித்து கலந்துரையாடப்படவுள்ளது. (ப-49)

## கூட்டுப் பிரார்த்தனை

(பொன்னாலை)

சங்கானைக் கோட்டப் பாடசாலை மாணவர்களின் ஏற்பாட்டில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மன ஆறுதல் வேண்டி, கூட்டுப் பிரார்த்தனை வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலயத்தில நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளது. (ப-49)

## மாணவர்களுக்கு உபகரணங்கள்

(யாழ்ப்பாணம்)

சுனாமி கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வடமராட்சி மாணவர்களுக்கு யுனிசெவ் நிறுவனத்தினால் பாடசாலை உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

இதன் முதற்கட்டப் பணியாக 2ஆயிரத்து 280 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ச)

## பரீட்சை

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலயக் கல்விப் பிரிவினரால் நடாத்தப்பட்ட முறைசாராக் கல்வி பயிற்சியின் இறுதிப் பரீட்சை எதிர்வரும் 21, 22, 23 ஆம் திகதிகளில் நடைபெறும்.

இப்பரீட்சைக்கு வரும் போது ஒப்படைகளைக் கொண்டு வருதல் வேண்டும் என்றும் வலயக கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தெரிவித்தார். (ப-29)

## வீதி திருத்தம்

(தனங்கிளப்பு)

கைதடி, தென்கிழக்கு கிராம சேவகர் பிரிவில் முத்தையாவத்தை வீதியின் திருத்த வேலைகள் முடிவுறும் நிலையில் உள்ளது.இப்பகுதி சமுர்த்தி செயலணி ஊடாக இவ்வீதி திருத்தப்பட்டுவருகின்றது. (ப-37)

## விரிவுரைகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தில் அனைத்து வருட கலைப்பீட மாணவர்களுக்குமான கற்பித்தல் விரிவுரைகள் வரும் மாதம் 14ஆம் திகதி ஆரம்பமாகும் என கலைப் பீடாதிபதி சிவச்சந்திரனால் தெரிவிக்கப்பட்டது. (ப-95)

## நிதி உதவி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களால் தென்மராட்சிப் பிரதேசத்தில் இருக்கின்ற முனபள்ளிகள், சனசமூக நிலையங்களுக்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்ட நிதியிலிருந்து ஒதுக்கப்பட்ட நிதிக்கான பொருள் வழங்கல் நிகழ்வு நாளை கொடிகாமத்திலுள்ள சாவகச்சேரி பிரதேச சபையின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

சாவகச்சேரி பிரதேச சபையின் செயலாளர் கே.என். பாலச்சந்திரன் தலைமையில் இந் நிகழ்வு நடைபெறவுள்ளது. (ப-16)

## தைப்பூசத் திருநாள்

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் எதிர்வரும் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தைப்பூசத்திருநாள் சிறப்பு ஆராதனைகள் வழமைபோல் காலை 8.00 மணியிலிருந்து பிற் பகல் 4.00 மணிவரை அபிஷேம், பூசை, ஆராதனை. மகேஸ்வர பூசை யோடு நிகழ ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன், தரிசனத்திற்காக வரும் பக்தர்கள், தத்தம் வாகனங்களில் ஆலயத்திற்கு வந்து போக வசதிகளும் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# சித்த மருத்துவம் ஓர் அறிமுகம்

## மருத்துவ விளக்கம்

தமிழ்மக்களின் பாரம்பரிய கலை மரபுகளில் ஒன்று சித்த மருததுவமாகும். அதனால் சித்த மருத்துவத்தை தமிழ் மருத்துவம் என அழைப்பது சாலச் சிறநதது. தமிழ்மருத்துவம் என்று கூறுமபோது அது எதனைக் குறிக்கின்றது என்பதனைச் சிந்திப்பது அவசியமாகும். சாதாரணமாக ஒருவர் பேச்சு வழக்கில் ஆங்கில மருந்து சாப்பிட்டேன். தமிழ் மருந்து சாப்பிட்டேன் என்று கூறுவது வழக்கம். தற்போது ஆயுர்வேதம், சித்த மருத்துவம் என்ற இருபதங்களும் எமது கல்வியாளர் மத்தியில் கூட சிறுசலனத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஆயுர்வேதமும் சித்த மருத்துவமும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்து இருந்தாலும் ஆரிய மக்களிடமிருந்து ஆயுர்வேத மருத்துவ முறையும், திராவிட மக்களிமிருந்து சித்தமருத்துவ முறையும் தோன்றியதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். வேத காலத்துக்கு முற்பட்ட மருத்துவத்தைத் திராவிட மருத்துவம் என்றும் அவை புராதன சித்தர்களால ஒழுங்குபடுத்தப்பட்டு சித்த மருத்துவம் என்ற பெயரில் சிறப்புப் பொலிவு பெற்று விளங்கியது என்றும் சில ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இந்த இரு மருத்துவ முறைகளையும் இரு கண்கள் போலக் கருதி மனித சமுதாயத்துக்குத் தேவையான வற்றை எடுத்துக் கொள்வதே சிறந்த பண்பாகும்.

இந்து தத்துவத்தில் வேதாந்தம், சைவசித்தாந்தம் ஆகிய இரு பிரிவுகள் காணப்படுகின்றன. வேதாந்தம் வட இந்தியாவுக்குரிய தத்துவமென்றும், சைவசித்தாந்தம் தென்நாட்டுக்குரிய தத்துவமென்றும் சிறப்பிக்கப்படுகின்றது. அவ்வாறே ஆயுர்வேதம் இந்தியாவில் வடநாட்டில் தோற்றம் பெற்றதென்றும், சித்த மருத்துவம் தென்நாட்டில் தோற்றம் பெற்றது என்றும் கருதப்படும். இவ்விரு மருத்துவ முறைகளும் "இந்திய மருத்துவம்'' என்ற பெயரில் இந்திய அரசால் முதன்மைப்படுத்தப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்டது போல் இலங்கையிலும் தென்பகுதி சிங்கள மக்களால் ஆயுர்வேத மருத்துவ முறையும், வடக்கு - கிழக்கு பகுதி தமிழ்மக்களால் சித்த மருத்துவ முறையும் பேணிப் பாதுகாத்து வரப்படுகின்றன. ஆனால் பெரும்பான்மை மக்களின் ஆட்சி முறையில் அரச நிர்வாகக் கட்டமைப்புகளில் ஆயுர்வேத மருத்துவ முறை அரியாசனத்தில் ஏறி சித்தமருத்துவம் பின்தள்ளப்பட்டு வருவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. உதாரணமாக தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள அரச சித்தமருந்தகங்கட்கு ஒரு சித்த மருந்தாயினும் அரசியால் வழங்கப்படாமையை இங்கு குறிப்பிடலாம். இவற்றுக்குக் காரணம் அரச ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்தில் சித்த மருந்துகள் தயாரிக்கப்படாமையேயாகும். இக்குறை நீக்கப்படவேண்டும். இதற்கு வடக்குக் கிழக்கு மாகாணசபையினால் ஒரு சித்தமருந்து தயாரிப்பு நிலையம் உருவாக்கப்படுவது இன்றியமையாத தேவையாகும். இதனை எமது தமிழ் அரசியல் பிரமுகர்களும், பொது அமைப்புகளும் கவனத்தில் கொள்வது அத்தியாவசியமாகும்.

சித்த மருத்துவம் தென்நாட்டில் (தமிழ் நாடு) சித்தர்களால் ஒழுங்குபடுத்தி உருவாக்கப்பட்டு எமக்குத் தந்த அரும்பெரும் செல்வமாகும். சித்தர் என்ற சொல் சித்து என்ற சொல்லிலிருந்து பிறந்ததாகும், இதற்கு வெற்றி, அறிவு, பூரணத்துவம் எனப் பல பொருள் உண்டு. சீத்தி பெற்றவர்கள் சித்தர்கள். சித்தியுடையவர்கள் சித்தர்கள் என்றும் கூறலாம். மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் அந்தக் கரணங்களை ஒன்றிணைக்க வல்ல திறமையுடையவர்கள் சித்தர்கள். சித்தர்களில் பல பிரிவுகள் உண்டு.

1. முதற் சித்தர் (மூல மரபு)
2. இடைச்சித்தர் (பால மரபு)
3. கடைச்சித்தர் (கைலை மரபு)

இவற்றைவிட நவநாத சித்தர், பதினென் சித்தர், நவகோடி சித்தர், நவ சித்தர் எனும் பிரிவுகள் உண்டு.

**முதல் சித்தர்:** பூரண ஒளி எந்த வடிவமோ, எந்தப் பெயரோ இல்லாதது. எங்கும் நிறைந்தது. ஐம்பூதங்களிலும் நிறைந்து உள்ளது. இவ்வைம்பூதங்களிலிருந்து ஏழுவகைத் தோற்றமும் உண்டானது. இவ்வாறு தோற்றத்திற்குக் காரணமான பூரண ஒளியிலிருந்து தோன்றியவர்களே முதல் சித்தர்கள். இதற்கு உதாரணமாக முருகனின் தோற்றத்தைக் கூறலாம். முருகன் மூல மரபில் வந்த சித்தர் என்பது சங்கத்தமிழ் இலக்கிய மரபாகும். சிவனையும் முதல் சித்தர் என அழைப்பர். தமிழ் நாட்டில் சிவனது ஒரு திருத்தலம் 'சித்தீஸ்வரம்' எனப்படும். தமிழகத்திலுள்ள அநேகமான கோயில்களின அருகில் ஒவ்வொரு சித்தரின் சமாதியும் அமைந்துள்ளது. உதாரணமாக மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் உள்ளது, சொக்க நாதச் சித்தரின் சமாதியாகும்.

**இடைச் சித்தர்:**

யோனி வாயிலாகப் பிறக்காமல் பிற உடம்பில் புகுந்து தோன்றி உலக நன்மைக்காகப் பல அரிய பெரிய செயல்களைச் செய்தவர்கள். இதற்கு உதாரணமாக திருமூலர் சரிதம் அமைந்துள்ளது.

**கடைச்சித்தர்:**

கருவில் தோன்றி யோனி வாயிலாகப் பிறந்து பின்தவ பலத்தால் சகல கலைகளையும் சித்துக்களையும் கற்று சித்துக் கைவரப் பெற்ற சித்தர்கள்.

மேற்குறிப்பிட்ட பிரிவுகளில் சித்த மருத்துவத்தோடு பதினெண சித்தர்கள் மிகவும் தொடர்புபட்டவர்களாவர். ஆனால் அவர்கள் பற்றிய தெளிவான வரலாறு மறை பொருளாகவே உள்ளது. மேலும் அவர்கள் காலம் பற்றிய கருத்து வேறுபாடும் உள்ளன. ஆனால் பொதுவாக பதினெட்டுச் சித்தர்கள் என்ற ஒரு மரபு காணப்படுகின்றது.

"வாதநூல் அத்தம் பதினெண பேர் சித்தர் வருணித்த நூல்களும் பலிதம்''

என புலஸ்தியர் கற்பம் 300 என்ற நூலில் கூறப்பட்டுள்ளது.

இந்தியாவின் தென்பகுதியில் பதினெண் சித்தர்கள் எனக் குறிப்பிடும் மரபு போலவே வட இந்தியாவில் நவநாத சித்தர்கள் எனக குறிப்பிடும் மரபும் உண்டு. இந்த பதினெண் சித்தர்கள் யாவர் என்பதை அண்மையில் தொகுக்கப்பட்ட சென்னைப் பல்கலைக்கழக அகராதியில் காணலாம்.

நாம் ஞான ஒளியைப் பெற வேண்டுமாயின் உடம்பும், மனமும் நல்ல நிலையில் இருக்க வேண்டும். உடலைப் பேணிப் பாதுகாப்பதின் முக்கியத்துவத்தைச் சித்தர்கள் வலியுறுத்தியுள்ளனர். திருமூலரின் வாக்குப் படி,

உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்மை வளர்க்கும் உபாயம் அறிந்தேன்
உடம்மை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே

இதிலிருந்து நாம் மெய்யறிவு பெற உடற்சுகம் அவசியம் என்பதை உணரலாம்.

மேலும், உடலினைச் சித்தர்கள் கோயிலாகவே கருதினர் இதனை,

உடம்பினை முன்னம் இழுக்கென்று இருந்தேன்
உடம்பின் உள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்பினுள் உத்தமன் கோயில் கொண்டானென்று
உடம்பினை யான் இருந்து ஓம்புகின்றேனே.

இவ்வாறு உடல் நலத்தின் முக்கியத்துவம் பற்றி சித்தர்கள் கூறியதுடன் சமுதாய முன்னேற்றத்திற்கும், ஆன்மீக வளர்ச்சிக்கும் கீழ் குறிப்பிட்டவாறு பல நூல்களை எமக்குத் தந்து வழி காட்டினார்கள்.

1. நோய்கள் தீர்க்கும் மூலிகைகளைக் கண்டறிந்து மருந்து செய்யும் முறைகளைத் தெரிவித்து நூல்கள் எழுதியுள்ளனர்.
2. கோள்களின் நிலை, கால மாறுபாடு பற்றி விளக்க நூல்களையும் எழுதியுள்ளனர்.
3. நிறைமொழி மாந்தராக விளங்கிய சித்தர்கள் மறை மொழிகளை மந்திரங்களாக்கி மனித ஆற்றலை ஒருமைப்படுத்தவும், கூர்மைப்படுத்தவும் தெய்வ வழிபாட்டு முறைகளைப் பாடலாக்கியுள்ளனர்.
4. யோகப்பயிற்சி, ஆன்மீகப் பயிற்சி, காயகற்ப முறைகள் பற்றியும் நூல்கள் தந்துள்ளனர்.

**Dr.பொன்.இராமநாதன்**
M.D.(s), விரிவுரையாளர்,
சித்த மருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்.

மேற்குறிப்பிட்ட விடயங்களிலிருந்து சித்த மருத்துவம் தமிழ் மருத்துவம் என்பது தெட்டத் தெளிவாகப் புலப்படுகின்றது. இதனைப் பேணிப்பாதுகாக்க வேண்டியது எம்முடைய தலையாய கடமையாகும். இதற்கமைய சித்த மருத்துவம் தழைத்தோங்க அனைவரும் ஒன்றுபட்டுப் பாடுபடுவோமாக! □

# இந்தியத்தூதுவர் அம்பாறைக்கு விஜயம்

(அம்பாறை)

இலங்கைக்கான இந்திய தூதுவர் நிருபமராவ் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட அம்பாறை மாவட்டத்திற்கு நேற்று முன்தினம் நேரில் சென்று அங்குள்ள நிலைமைகளைப் பார்வையிட்டார்.

கல்முனை, மருதமுனை, காரைதீவு, மருதங்கேணி, நிலாவெளி ஆகிய இடங்களையும் பார்வையிட்ட அவர், அம்பாறை மாவட்டச் செயலகத்தில் அமைச்சர் பேரியல் அஷ்ரப் தலைமையில் நடைபெற்ற மாநாட்டிலும் கலந்துகொண்டார்.

அனர்த்த விபரங்கள் பற்றியும் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் நிவாரண உதவிகள் பற்றியும் அமைச்சர் பேரியல் அஷ்ரப் இந்தியத் தூதுவருக்கு விளக்கிக் கூறினார்.

இதேவேளை, கடந்தவாரம் இந்தியத் தூதுவர் குடாநாட்டுக்கு திடீர் விஜயம் மேற்கொண்டு அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வடமராட்சிப் பகுதிகளைப் பார்வையிட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது.(த)

# கோதுமை மா இறக்குமதிக்கு தனியார் துறைக்கும் அங்கீகாரம்

(கொழும்பு)

பிறிமா நிறுவனம் கடந்த 25 வருடங்களாக தன்னகத்தே வைத்திருந்த கோதுமை மா ஏகாதிபத்தியத்தை அரசாங்கம் முறியடித்துள்ளதாக வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

அரசாங்கம் மாதாந்தம் 25 தொன் கோதுமை மாவினை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதிசெய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், தனியார் துறையினருக்கும் மா இறக்குமதிக்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

இதுவரை காலமும் பிறிமா நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட ஒரு கிலோ மாவுக்கு அரசாங்கம் 7 ரூபா 50 சதத்தினை மானியமாக வழங்கிவந்தது.

இனிமேல் அதற்கான அவசியமில்லை. அரசாங்கம் இறக்குமதி செய்து விநியோகிக்கும் மா 25 ரூபாவிற்கு எதிர்காலத்தில் விற்பனை செய்யப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார். (ற-9)

# பாதிக்கப்பட்டோருக்கு இராணுவம் உதவி

(யாழ்ப்பாணம்)

சுனாமி கடல்கொந்தளிப்பினால் சேதமடைந்த வீடுகளின் இடிபாடுகளை அகற்றுதல், தடைப்பட்டிருந்த பிரதான வீதியை சுத்தம் செய்தல், மீன்பிடிப் படகுகளை கரைக்கு எடுத்துவர உதவியதுடன், நிலக்கண்ணி வெடிகளை அகற்றி மக்களின் வாழ்க்கையை மீண்டும் மேலோங்கச் செய்யும் நடவடிக்கைகள் யாழ்ப்பாண இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் எஸ்.டி. தென்னக்கோனின் ஆலோசனை, வழிகாட்டலுக்கு அமைய 524 வது கட்டளையிடும் அதிகாரி கேணல் கே.எஸ்.ரத்னாயக்கவினால் அத்தலைமையகம் அமைந்துள்ள பிரதேசத்தில் கடந்த 10 ஆம் திகதி காலை ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறை பிரதேசத்தில், சக்கோடடைப் பகுதியில் வாழ்ந்த மீனவர்களின் பெரும் எண்ணிக்கையான படகுகள் அடித்துச் செல்லப்பட்டதுடன், அம்மீனவர்களின் மீனவத்தொழில் மீண்டும் ஆரம்பிப்பதற்காக அப்படகுகளை இருந்த இடத்திற்கு எடுத்துச்செல்ல முடியாமல் பல பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்திருந்தனர்.

இவ்வேளை, பாதுகாப்புப் படையினரினால், 11 மீன்பிடிப் படகுகள் துறைமுக பாரம் தூக்கி மூலம் 14 ஆம் திகதி பிற்பகல் கடல் பகுதிக்கு எடுத்துச்சென்று வைத்தனர்.

அப்போது அக்கிராம மீனவ சங்கத் தலைவர் மற்றும் சகல மீனவர்களும் தமது நன்றியை இராணுவத்தினருக்குத் தெரிவித்துக்கொண்டனர். அவ்வேளை அங்கு குளிர்பானங்களும், இனிப்புப் பண்டங்களும் பரிமாறப்பட்டன. (ற)

## பெற்றுக்கொள்க

(பொன்னாலை)

நலலூர், யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவுகளுக்குட்பட்ட மாதாந்த உதவிப் பணம் பெறுவோர்கள் தமது உதவிப் பணக் கொடுப்பனவுகளை இம் மாதம் 25 ஆம் திகதிக்கு முன் பெற்றுக் கொள்ளுமாறு ஆனைப்பந்தி தபாலகம் அறிவித்துள்ளது. (ப-49)

# கனேடியப் பிரதமர் இலங்கை வருகை

(கொழும்பு)

கனேடியப் பிரதமர் போல் மார்டின் நேற்று கொழும்பை வந்தடைந்தார். கொழும்புக்கு வந்த கனேடியப் பிரதமரை பிரதமர் மகிந்தராஜபக்ஷ, வெளிவிவ கார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோர் விமான நிலையத்தில் வைத்து வரவேற்றனர்.

இதேவேளை, அவர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குச் சென்று சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் பார்வையிடவேண்டுமென தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் ஏற்கனவே கோரிக்கை விடுத்துள்ளார். (ச)

# திட்டமிடல் பணிப்பாளராக கேதீஸ்வரன் நியமனம்

யாழ்.மாவட்ட செயலகத்தின் திட்டமிடல் பணிப்பாளராக கே.கேதீஸ்வரன் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இவர் கடந்த சனிக்கிழமை தனது கடமையைப் பொறுப்பேற்றார். யாழ். மாவட்ட செயலகத்தின் திட்டமிடல் பணிப்பாளராக இருந்த பு.சுந்தரம்பிள்ளை ஓய்வு பெற்றுச் சென்றதையடுத்தே கோப்பாய் பிரதேச செயலராக இருந்த கே.கேதீஸ்வரன் செயலகத்திட்டமிடல் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். (ற-19)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கு நிவாரணம் வழங்க அரசு துரித நடவடிக்கை

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு அரசாங்கம் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

வீடுகளை இழந்தவர்களுக்கு 12 மாதகால சம்பளப்பணம் வழங்கபபடவுள்ளதுடன், இதறகு மேலதிகமாக வீட்டு உபகரணங்களைக கொள்வனவு செய்வதற்கென்று வட்டியில்லாக கடனாக 50 ஆயிரம் ரூபாவைப் பெற்றுக் கொள்ளவும் முடியும எனறு பொது நிாவாக அமைச்சு தெரிவித்துள்ளது.

இவையனைத்தும் 60தவணைகளில் செலுததப்படுவது அவசியமானதாகும். இந்த விடயம் தொடர்பான சுற்றுநிருபத்தை பொதுநிர்வாக உள்நாட்டு அலுவலகள் அமைச்சு இந்தவாரம வெளியிடவுள்ளது.

கூட்டுத்தாபனங்களும், நீதிச் சேவையைச் சேர்ந்த ஊழியர்களும் இத்தகைய நிவாரணங்களைப் பெறுவதற்கு உரிமையுடையவர்களாவர்.

இதேவேளை, இவ் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு இதுவரை கடமைக்குச் சமூகமளிக்காத அரச ஊழியர்கள், சமூகமளிக்காத நாட்கள், சம்பளத்துடனான விடுமுறையாகக் கருதப்படவேண்டும என்று பொதுநிர்வாக அமைசசு திறைசேரிக்கு அறிவித்துள்ளது. (ந-9)

## கற்றல் உபகரணம் வழங்கல்

(துன்னாலை)

அகில இலங்கை சைவன் நற்பணி மன்றத்தினர் வடமராட்சியிலுள்ள செல்வாபுரம் இளங்கோ பாலா பாடசாலை, கரணவாய கிருஷ்ணா சைவப் பாலர்பாடசாலை, கரவெட்டி ரலன்ற் முன்பள்ளி ஆகியவற்றில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு அப்பியாசக கொப்பிகள, எழுது கருவிகள் என்பவற்றை வழங்கினர். (ப-101,9)

## வர்த்தக நடவடிக்கைகளை மீளமைக்க அரசு திட்டமொன்றை ஆரம்பிப்பு

சுனாமி கடற்பேரலைகளினால் பாதிக்கப்பட்ட வர்த்தகர்களின் சமூக மற்றும் வர்த்தக நடவடிக்கைகளைப் புனரமைப்பதற்கு அரசாஙகம திட்டமொன்றை ஆரம்பித்துள்ளது.

வர்த்தக சமூகத்தினர் தங்களுடைய நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிக்கவென 5ஆயிரம் ரூபா தொடக்கம் 5இலட்சம் ரூபா வரையிலான கடன் வசதிகள் வழங்கப்படவுள்ளன.

இந்தக் கடன் வசதிகளைத் திருப்பிச் செலுத்துவதற்கு ஒரு வருடகால அவகாசம் வழங்கப்படும்.

திறைசேரியின் பிரதிச்செயலாளர் கிருஷ்ண அபயசிங்க இதுகுறித்து கருத்து வெளியிடும்போது,

பாதிக்கப்பட்ட மக்களை பிரதேச செயலாளர்கள் இனங்கண்டு அதற்கேற்றவகையில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனக் குறிப்பிட்டார்.

இதேவேளை, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான மின்சாரக் கட்டணங்கள், நீர்விநியோகக் கட்டணங்கள் என்பனவற்றையும ரத்துச் செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. (ந-9)

### உறுப்பினர்கள் தெரிவு

வேலணை வர்த்தக சங்கத்தின் பொதுக்கூட்டம் கடந்த 09 ஆம் திகதி நடைபெற்றது. இதில் சங்கத்தின் புதிய தலைவராக அ.இராசேந்திரமும், உபதலைவராக க.பாஸ்கரனும், செயலாளராக வே.திருநாவுக்கரசும், பொருளாளராக இ.விஜேந்திரனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ந)

## ரூபாவின் பெறுமதி அதிகரிப்பு;

# அதிகரித்த வாழ்க்கைச் செலவை குறைக்க முடியுமென சுட்டிக்காட்டு

(கொழும்பு)

ரூபாவின் பெறுமதி அதிகரிப்பின் பலன்களை மக்களுக்குப் பெற்றுக்கொடுக்கவேண்டும் என்று ஜே.வி.பியும், ஜாதிக ஹெல உறுமயவும் கோரிக்கை விடுத்துள்ளன.

ரூபாவின் பெறுமதி அதிகரித்திருப்பதன் காரணமாக இறக்குமதி செய்யப்படும் பொருடகளைப் போன்று உள்நாட்டில் உற்பத்திசெய்யப்படும் பொருட்களின் விலைகளையும் வாழ்க்கைச்செலவையும் குறைக்க முடியும் என அக்கட்சிகள் தெரிவித்துள்ளன.

அத்துடன், ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியினால் அதிகரித்த எரிபொருளின் விலையைத் தற்போதைய விலையிலிருந்து குறைக்க முடியும் என்றும் அவ் இரு கட்சிகளும சுடடிககாட்டியுள்ளன.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கபபடட மகக்ளுக்கு இதன் மூலம் பெருமளவு நிவாரணங்களை வழங்கமுடியும் என நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச குறிப்பிட்டுள்ளார்.

அதிகரித்துள்ள எரிபொருளின விலையினை ரூபாவின பெறுமதி அதிகரிப்பினால் கட்டுப்படுதத முடியும் எனவும் குறைந்தபட்சம் டீசலின் விலையையேனும் குறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இதுதவிர, சர்வதேச சமூகத்திடம் இருந்து இலங்கைக்கு கிடைக்கும் உதவிகள் ஊடாக அதிகரித்துச் செல்லும் ரூபாவின் பெறுமதியின் மூலம் மக்களின் வாழ்க்கைச்செலவினை அரசாங்கம் கட்டுப்படுத்த முடியும் என ஜாதிகஹெல உறுமயவின் பிரதித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பனருமான ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக எரிபொருள், மின் கட்டணம் ஆகியவற்றைக் குறைப்பதற்குரிய காலம்தோன்றியிருபபதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

உலக சந்தையில் நிலவும எரிபொருட்களின் விலையின் கீழ் ரூபாவின் பெறுமதி அதிகரித்த போதிலும், பெற்றோல தவிாந்த ஏனைய எரிபொருட்கள் யாவும் நஷ்டத்திற்கு விற்பனை செய்யப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார். (ந-4)

# பொங்குதமிழின் 4ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வுகளில்...



யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் நேற்றைய பொங்குதமிழ் நிகழ்வில் தலைமையுரையை யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒனறயத தலைவா எஸ.செலவககுமாரும, சறபபுரைகளை கலாநத சதமபரநாதன, துணைவேநதா பேராசாயா சு.மோகனதாஸ யாழ.மாவடட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி மற்றும் யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பனர் செ.கஜேந்திரன் ஆகியோரும் நிகழ்த்துவதைப் படங்களில் காணலாம்.

படங்கள் - எஸ்.சிவசங்கர்

## மீள் பார்வை

# யாழ்ப்பாணத் தமிழரசர் வரலாறும் காலமும்

**வேலணை பண்டிதர் பொ.ஜெகந்நாதன்** **41**

அப்படி 200 ஆண்டுகளுக்கு மேலாக ஓர் இடத்தில் இருந்த ஒரு தலைநகரை அது இருந்த இடம் இன்னது தான் என்று நிச்சயம் செய்ய எண்ணிய பொழுது இச்சாசனத்தைப் பார்த்தா நிச்சயித்திருக்க வேண்டும்? ஏன் இவர்கள் அவ் வல்லிபுரத்தை போய்ப் பார்த்து அங்கேயுள்ள சிங்கைநகர அடையாளங்களையோ! வேறும் சின்னங்களையோ கண்டு அவைகளை எடுத்துக் காட்டி அச் சிங்கைநகர் இவ் வல்லிபுரத்தில்தான் இருந்திருக்கிறது என்று ஏன் நிச்சயம் செய்திருக்கக் கூடாது? இவர்கள் ஒரு முகமாக 200 ஆண்டுகளுக்கு மேலாக ஒரு இடத்தில் இருந்ததாக நிச்சயம் செய்யும் ஒரு தலைநகரை, இவர்கள் கூற்றுப்படி பதினொரு தலைமுறை மன்னர்கள் இருந்தரசு புரிந்த ஒரு தலைநகரை, இட நிச்சயம் செய்வதன் கண் இச் சாசனத்தையா எடுத்துக் காட்டவேண்டும்? அந்த இடத்தில் அம் மன்னருள் ஒருவர் வாழ்ந்த ஒரு சுவட்டை-ஒரு அடையாளத்தை எடுத்துக் காட்டினால் போதுமே இவர்கள் அச் சாசனத்தை வலிய சான்றாகக் கொண்டு வல்லிபுரத்தில் சிங்கை நகர் இருந்தது என்று முடிபு பண்ணி விட்டார்கள் அன்றியும் வல்லிபுரத்தில் சிங்கைநகர் உண்டென்பதை அதன் புரதான அம்சங்களைக் கொண்டோ அவற்றை எடுத்துக் காட்டியோ நிச்சயம் செய்யவில்லை என்பதும் கவனிக்குக.

இச் சாசனத்தின் பொருள் வரையறவாய்த் தெளிவாய் வெளிப்படையாய் இல்லாத தார தன்மியத்தை விளங்கினவர்கள் இச் சாசனத்தை மாத்திரம் சாட்சியாக வைத்து வல்லி புரத்தில் சிங்கைநகர் உண்டென்று நிச்சயம் பண்ண துணியார். துணிவதும் தப்பு நிற்க. சிங்கைநகர் மன்னரை சிங்கையாரியர் என்பார்கள். இவ்வாராட்சிக்காரர் பதினொரு மன்னர் கள் அங்கு வாழ்ந்ததையும் அப் பரம்பரை இருநூற்று சொச்ச ஆண்டுகள் அவ்விடத்தில் வாழ்ந்ததையும் ஒப்புக்கொள்கிறார்கள். அப்படி ஒப்புக்கொள்ளுபவர்கள் ஏன் அம் மன்னர் வாழ்வொடு சம்பந்தப்பட்ட ஏதாவதொரு தொல்பொருளை எடுத்துக் காட்டிச் சாசனத்தால் தாம் கண்ட கோட்பாட்டை உறுதிப்படுத்தாமல் விட்டவாறு ஒரு முடிபை ஒரு ஆராய்ச்சியாளர் நிலைநாட்டும் பொழுது அம்முடிபை வலியுறுத்தும் பிற சான்றுகளையும் எடுத்துக் காட்டுதல் அவசியமானது என்பதை இவ்வாராய்ச்சிக்காரர் புரியாமலில்லை. அவர்கள் வாய்க்கூற்றாலேயே இவ்வுண்மையறியலாம்.

" பண்டை நாள் ஒரு சாதியார் ஒரு தானத்தில் வசித்துப் போயினர் என்னும் செய்திக்கு வேறு சாசன சாட்சியங்களில்லாமற் போகலாம். சாட்சியங்களிருப்பினும் அவை மயக்கமுள்ள வைகளாகலாம். அன்னோர் அத்தானத்துக்கிட்டு வழங்கிய பெயர் மட்டும் நிலைப்பதுண் டாயின் அதுவோ அவர்கள் ஒருநாள் அங்கு குடியிருந்தமைக்கு என்றுமழியாத சந்தேக விபரீதமில்லாச் சாட்சியங்களாகும். இவ்வாறே யாழ்ப்பாணத்துத் தானம் பெயர்களுட் பெரும்பாலானவை"(யா வை.வி.பக்.29) ஆகையால் இச் சாசனத்தைக் கண்ட துணையானே தாமே நேரடியாக வல்லிபுரத்துக்குச் சென்று ஆங்குள்ள தொல்பொருள் ஆய்வுப் பொருட் களை ஆராய்ந்து கண்டு அக்காட்சியாற் பெறப்பட்ட முடிபாக அச் சிங்கைநகரை வல்லி புரத்தில் நிச்சயம் செய்துரைப்பின் சாலவும் பொருத்தமாம். அதனை யார் தான் மறுப்பர். சாசனமாம் அப்பிறர் கூற்றைத் துணைக்கொண்டு மாத்திரம் வல்லிபுரத்தில் சிங்கைநகரை நிச்சயம் செய்வது இவர்கள் ஆய்வின் நெகிழ்ச்சியைக் காட்டியவாறாம். நிற்க அச் சாசனத்தில் வல்லிபுரம் சொல்லப்படவில்லையே. நம் கொள்கை வல்லிபுரத்தில் சிங்கைநகர் இல்லை என்பதுதான்.

வல்லிபுரத்தில் சிங்கையாரியர் வாழ்ந்ததான குறிப்புக்கள் யாதொன்றும் அகப்படாமை கொண்டு வல்லிபுரத்தில் சிங்கைநகர் இல்லை என்ற முடிபுக்கு அவர்கள் வரவில்லை. சிங்கைநகரைப் பற்றி அவர்களுக்குண்டாயிருந்த ஞான சூனியத்தாலே சிங்கைநகர் அங்கே இருந்திருக்கிறது என்றும் அதனை அத்தாட்சிப்படுத்தும் சான்றுக்கள் தான் வல்லிபுரத்தில் தங்களுக்கு எட்டவில்லை என்றும் முடிபுக்கு வந்திருக்கிறார்கள். சிங்கைநகர் அங்கே இல்லாவிட்டால் அது இருந்ததாக அத்தாட்சிப்படுத்தும் சான்றுக்கள் அங்கே கிடைக் காதன்றோ எனவே அதனாலே தான் அவர்கள் சாசனம் ஒன்றைக் கொண்டு சிங்கைநகரை அங்கே நிச்சயம் செய்திருக்கிறார்கள். வல்லிபுரத்தில் சிங்கை நகரிருந்திருந்தால் அந்நகர் மன்னரின் வாழ்வுத் தொடர்புகள் காரணமாக அவர்கள் பெயரால் நிலங்கள், குளங்கள், கோயில்கள் இன்னும் வேறு பொருட்கள் வேறும் சுவடுகள் பிற ஐதீகங்கள் என்பன போன்ற பலவற்றுள் இவ்வுண்மை தெரிந்து கொள்ளக்கூடிய குறிப்புக்களிற் பொழுதும் அங்கேயிருக்க வேண்டுமே அவைகள் ஒன்றும் அங்கேயில்லையே யாம் முன்னர் வல்லிபுரத் துக்குச் சென்று அந்நகர் இருந்த இடங்களையெல்லாம் சுற்றிப் பார்த்து மீண்டுள்ளோம் அந்நகர் இருந்த அதாவது அங்கே சிங்கையாரியர் வாழ்ந்த சுவடு ஒன்று கூட நாம் அறிய முடியவில்லை நிற்க.

ஒரு விஷ சர்ப்பம் தோன்றி மறைவது போன்றதல்ல ஓரிடத்தில் ஒரு நகர் தோன்றி மறைவது. அந்நகர் அங்கே கட்டப்பட்டால் அங்ஙனம் கட்டிய வரலாறெங்கே? அழிந்து பட்டால் அழிந்துபட்ட வரலாறெங்கே? அந்நகர மன்னர் பிறநாட்டு மன்னரொடு பொருதிய போர் வரலாறெங்கே? எங்கே அவர் காலச் சம்பவங்கள்? எங்கே அவர்கள் குடும்ப வரலாறுகள் பிற குறிப்புக்கள்? இவர் பின்னவர் வரலாறெங்கே? இன்னோரன்ன பல வினாக்கள் எழுப்பலாம். இவையொன்றுக்குக் கூட அவர்கள் தூலாதாரம் காட்டவில்லை, அங்ஙனம் காட்டவும் முடியார்து சிங்கையாரியரின் வல்லிபுரச் சம்பந்தம் பற்றிக் கைலாயமாலை, வைபவமாலை ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

### 34. "இலக்கிய சகாப்தம் எண்ணூற்றெழுபது"

"இலக்கிய சகாப்தம் எண்ணூற்றெழுபதாம் ஆண்டதெல்லை
அலர் பொலி மாலை மார்பனாம் புவனேக வாகு
நலமிகும் யாழ்ப்பாண நகரி கட்டுவித்து நல்லைக்
குலவிய கந்த வேட்குக் கோயிலும் புரிவித்தானே"

இது, கைலாயமாலையில் உள்ள பாடல் இது. ஆதிச் சிங்கையாரிய மன்னனின் ஏவலின் படி அமைச்சர் புவனேகவாகு யாழ்ப்பாண நல்லூர்த் தலைநகர் கட்டிய செய்தியைச் சொல்வது. அதில் உள்ள இலக்கிய சகாப்தம் எண்ணூற்றெழுபது என்பதற்கு எட்டு நூறும் 70 உம் கொண்ட தொகையென்று பொருள்களெல்லாம் பிறர் வேறு தொகையாகப் பொருள் காண்கிறார்கள். யா.வை.வி காரர் சொல்லும் பொருளாவது "எண்ணூற்றெழுபது 870 அன்று ஆயிரம் ஆகிய (பேர்) எண்ணும் 170உம் சேர்ந்த கணக்காமெனத் தோன்றும் எண் என்பதை ஆயிரம் என்னும் பேரெண்ணெனக் கொள்வது எவ்வாறெனில் இத் தனிக்கவி வேறோரு கவியை அனுசரித்துச் செய்யப்பட்டது. அக் கவியில் எண் என்பது பேரெண் ணையே குறிக்கும் என்பர் அது வருமாறு,

(தொடரும்)

## பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு கல்வி சார் உபகரணங்கள்

(கொழும்பு)

'சுனாமி' அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான கல்வி வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் தேசிய நடவடிக் கைகளை யுனிசெப் நிறுவனம் மற்றும் தேசிய நடவடிக்கை நிலையம் என்பன மேற்கொள்ளவுள்ளன.

இந் நிறுவனங்கள் மாணவர்களுக்கான சீருடை மற்றும் பாடசாலை தளபாடங்கள் என்பனவற்றை வழங்க முன்வந்துள்ளன.

இந்தப் பொருட்கள் அந்தந்த கல்வி வலயங்கள் ஊடாக மாணவர் களுக்கு விநியோகிக்கப்படும் எனவும் பாதிக்கப்பட்ட பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் பற்றிய விபரங்களை உடன் அனுப்பி வைக்குமாறும் தேசிய நடவடிக்கை நிலையம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுள்ளது.

விபரங்களை இந்த நிலையத்திற்கு 4740231 என்ற இலக்கத்தில் தொலைநகல் இலக்கம் ஊடாக அனுப்பி வைக்கமுடியும் அல்லது யுனி செப் நிறுவனத்திற்கு 551333 எனும் இலக்கத்தில் தொலைநகல் ஊடாக அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ந-9)

## சுனாமியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்டஈடு

(கொழும்பு)

விவசாயம் மற்றும் விவசாய சேவைகள், காப்புறுதிச் சேவைகள் சபை கடற்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக் கும் கடற்தொழிலாளர்களுக்கும் உச்சக்கட்ட நஷ்டஈட்டைப் பெற்றுக் கொடுப்பதறகு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

சபையின் தலைவர் கலாநிதி எ.ஆர். அரியரத்தினம், கடல் அனர்த்தத் தினால் ஏற்பட்ட பொருள் சேதம் சம்பந்தமாக சகல தகவல்களையும் சமர்ப் பிக்கும் படி கேட்டுள்ளார்.

வழங்கப்படும் தகவல்களின் அடிப்படையில் நஷ்டஈட்டுக் கொடுப்பன வுகள் வழங்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை விவசாயிகள், கடற்தொழிலாளர்கள், சமூகசேவை மற்றும் சுகாதாரக் காப்புறுதித் திட்டங்களில் பங்கு பற்றியவர்களுக்கு விசேட சலுகைகளும் வழங்கப்படவுள்ளன. (ந-9)

## உலக சுகாதார நிறுவனப் பிரதிநிதி யாழில் நிலைமைகளை ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

உலக சுகாதார நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநிதி டாக்டர் கன்ருன் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்தார். சுனாமியால் பாதிக் கப்பட்ட பிரதேசங்களினதும் அப்பகுதி மக்களினதும் சுகாதாரப் பிரச் சினைகள் மற்றும் தேவைப்பாடுகள் குறித்து அறிந்து கொள்வதற்காகவே கன்ருன் நேற்று முன்தினம் யாழ்.வந்தார்.

அவர் யாழ். அரச அதிபர் கே. கணேசை சந்தித்து சுகாதார நிலை மைகள் குறித்து ஆராய்ந்தார். பின்னர் மாகாண பிரதி சுகாதாரப் பணிப் பாளரையும் சந்தித்து சுகாதாரப் பிரச்சினைகள் குறித்தும் கேட்டறிந்து கொண்டார். (ச-19)

## அம்பாறை மாவட்டத்திற்கு இரு மேலதிக அரச அதிபர்கள்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்திற்கு இரு தமிழ் பேசும் மேலதிக அரச அதிபர் கள் நியமிப்பதற்குக் கொள்கையளவில் இணக்கம் தெரிவிக்கப்பட் டுள்ளது.

பொது நிர்வாக முகாமைத்துவ மறுசீராக்கல் அமைச்சர் அமர ஸ்ரீ தொடங்கொடவிடம் அகில இலங்கை அரச பொது ஊழியர் முன்னணித் தலைவர் எஸ். லோகநாதன் விடுத்த வேண்டுகோளின் பிரகாரம் மேற்படி இணக்கம் காணப்பட்டுள்ளது.

சுனாமி கடல் அனர்த்தத்தையடுத்துக் கரையோரப் பிரதேச பாதிப்புப் பிரதேசங்களுக்கான நிவாரணப் பணிகள் மேற்கொள்வதில் அம்பாறை கச்சேரி பலத்த அசௌகரியங்களையும் பாரபட்சங்களையும் மக்களிடம் காட்டி வருவதாக அவர் அமைச்சரிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

முஸ்லிம் சமூகத்திற்கான நிவாரணப் பணிகளை முஸ்லிம் அமைச் சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்னின்று செய்வதால் பிரச்சினை பெரிதாக ஏற்படுவதில்லை. ஆனால் இதனால் தமிழ்ப் பிரதேசங்களுக்கான நிவாரணப் பணிகளில் தொய்வு நிலை காணப்படுவதாக அவர் எடுத்துக் கூறினார்.

எனவே, அரச அதிபருக்கு மேலதிகமாக தமிழ், முஸ்லிம் சமூகத்திலி ருந்து இரு மேலதிக அரச அதிபர்களை நியமிக்க கோரியபோதே இவ் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-4)

## ஆசிய அபிவிருத்தி வங்கித் தலைவர் தமிழ்க் கூட்டமைப்புடன் சந்திப்பு

(திருகோணமலை)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் டடாலு சினோவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினர்.

இச் சந்திப்பின் போது, நிவாரணப் பணிகளில் அரசு இனப்பாகு பாடு காட்டுவதைக் கூட்டமைப்பினர் சுட்டிக்காட்டினர்.

போரினால் பாதிக்கப்பட்டு ஏதிலியராக முகாம்களில் வாடிய நிலையில் கடந்த மூன்றாண்டு அமைதி ஒப்பந்த காலத்தில் கூட மீளக்குடியேற்ற வாய்ப்புகள் நிராகரிக்கப்பட்ட மக்களே தற்போதைய ஆழிப்பேரலை அழிவிலும் சிக்கியுள்ளதாகவும் கூட்டமைப்பினர் சுட்டிக்காட்டினர்.

நிவாரணப் பணிகள் கொழும்பை மையப்படுத்தி இயங்குவதாலும், இராணுவத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதாலும் தமிழர்களுக்குப் பாரிய இழப்புகள் ஏற்படும் என்றும், ஆழிப்பேரலை ஏற்பட்டது முதல் தொடர்ச் சியாக அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்ட தமிழர் புனர் வாழ்வுக் கழகம் மற்றும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் அனைத்து வித செயற்பாட்டையும் இந்த நடவடிக்கை கடுமையாக பாதித்துள்ளது என்றும் சினோவிடம் கூட்டமைப்பினர் குறிப்பிட்டனர்.

கூட்டமைப்பின் சார்பில், நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன், ஜோசப் பரராஜசிங்கம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் இச் சந்திப்பின் போது பங்கேற்றனர். (த-4)

# இந்தியாமீது பாக். அணுகுண்டு போடலாம்?

## சி.ஐ.ஏ உளவுத்துறை எச்சரிக்கை

(வோஷிங்டன்)

இந்தியாவின் பலம்வாய்ந்த இராணுவத்தைச் சமாளித்து வெற்றி காண, பாகிஸ்தான் அணுவாயுதங்களைப் பயன்படுத்தலாம் என்று அமெரிக்க உளவுநிறுவனமான சி.ஐ.ஏ, நிபுணர் அச்சம் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க தேசிய உளவுத்துறை கவுன்சில், 'சர்வதேச நாடுகளின் எதிர்காலம் பற்றிய வரைபு' என்ற தலைப்பில் அறிக்கை ஒன்றைத் தயார்செய்துள்ளது. மொத்தம் 114 பக்கங்கள் கொண்ட இந்த அறிக்கையில் சி.ஐ.ஏ. உளவுப்பிரிவு நிபுணர், 'இந்தியா - பாகிஸ்தான் இடையே மோதல் ஏற்பட்டால், இரண்டு நாடுகளுமே அதற்கான விலையை அதிகமாகக் கொடுக்க வேண்டியிருக்கும்.

இந்தியாவின் மிகப்பெரிய இராணுவ பலத்தை எதிர்த்து வெற்றி கொள்ளும் அளவுக்குப் பாகிஸ்தானிடம் படைபலம் இல்லை. மேலும், போர்த திறன் விடயத்தில் இஸ்லாமாபாததிடம் ஆழமான திறனும் இல்லை.

அந்தச் சூழ்நிலையில் இந்தியாவை வெற்றிகொள்ள அணுவாயுதங்களைப் பாகிஸ்தான் பிரயோகிக்கக்கூடும். நீண்டதூரம் சென்று தாக்கும்திறன் படைத்த ரொக்கெட்டுகள், ஏவுகணைகளின் கண்டுபிடிபபுகளால் இராணுவத்திடம் உள்ள இந்த ஆயுதங்களைப் பயன்படுத்தும் நிலை வரலாம்.

இரு நாடுகள் மோதினால், அதன் பின்விளைவு பயங்கரமானதாக இருக்கும் என்பது நிச்சயம். இந்தச் சூழ்நிலையில் காஷ்மீர், பலஸ்தீனம், தைவான் போன்ற இடங்களில் உள்ள பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வுகாண தொடர்ந்து அமெரிக்கா பாடுபடும்' எனத் தெரிவிததார். (து)



இந்தியாவில் அலமாதி அணைக்குள் விழுந்து விபத்துக்குள்ளான பஸ்சை மீட்புப் படையினர் கிரேன் மூலம் தூக்கி நிறுத்த முயலும் காட்சி.



உலகப் புகழ்பெற்ற அலங்கா நல்லூர் ஜல்லிக்கட்டு நேற்று முன்தினம் நடந்தது. சீறிப்பாய்ந்த காளையை அடக்க முயன்ற மாடுபடி வீரரை மாடு தனது கொம்பினால் தூக்கிச் சென்றது.

# நேபாளத்தில் மக்களாட்சி மலரவேண்டும்

## நேபாளிகள் மாநாட்டில் தீர்மானம்

நேபாளத்தில் மன்னர் ஆட்சி முறையை முடிவுக்குக் கொண்டு வந்து அங்கு ஜனநாயக ஆட்சி மலரச் செய்யவேண்டும் என்று புதுவையில் நடந்த நேபாளிகள் மாநாட்டில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

நேபாளி மக்களின் உரிமைப் பாதுகாப்புக் குழுவின் புதுவை மாநாடு கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் குறிதது அந்தக் குழுவின் தலைவர் என்.பி.திவாரி, "நேபாளத்தில் ஜனநாயகம் மலரவேண்டும் என்று மக்கள் போராடி வருகின்றனர்.

நேபாளத்தில் பேச்சுவார்த்தை மூலம் இப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். நேபாளத்தில் ஜனநாயகம் மலர இநதியா போன்ற நாடுகள ஆதரவளிக்க வேண்டும்.

நேபாளத்தில் அப்பாவிகள் பலர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். அவர்களை நிபந்தனையின்றி விடுதலை செய்யவேண்டும்.

இந்தியாவில் நேபாளிகளின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும். இந்தியாவிலிருந்து நேபாளம செல்லும்போது எல்லைப்பகுதியில் உள்ள இந்திய எல்லைப் பாதுகாப்புப் படையினர் தகாதமுறையில் நடந்துகொள்கின்றனர்.

இந்தியாவில் கஷ்டப்பட்டு சம்பாதித்து எடுத்துச்செல்லும் பணத்தைப் பிடுங்கிக்கொள்கின்றனர்.

பெண்களைச் சித்திரவதை செய்கின்றனர். இந்திய அரசு நேபாளிகளுக்குத் தகுந்த பாதுகாப்புக் கொடுக்கவேண்டும். இந்தியாவுக்கும், நேபாளத்துக்கும் 1950ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஒப்பந்தத்தை அமுல்படுத்த வேண்டும்' எனச் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (து)

# நாஷா அனுப்பிய ஹைஜன்ஸ் ஆய்வுகலம்

## சனிக்கிரக துணைக்கோளில் இறங்கியது

(லொஸ் ஏஞ்சல்ஸ்)

சனிக்கிரகத்தின் துணைக்கோளான டைட்டானில், ஹைஜன்ஸ ஆய்வுக்கலம் தரையிறங்கியுள்ளது.

அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வுமையம், கடந்த 1997 ஆம் ஆண்டு காசினி விண்கலத்தை விண்ணில் ஏவியது. இந்த விண்கலம் செவ்வாய், வியாழன் ஆகிய கிரகங்களைப் பற்றி ஆராய்ந்துவிட்டு ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு சனிக் கிரகத்தை நெருங்கியுள்ளது.

சனிக்கிரகத்தின் வளையங்களைப் பற்றியும், இந்தக் கிரகத்தின் துணைக்கோளான டைட்டானைப் பற்றியும் இந்த விண்கலம் ஆராய்ந்து வருகிறது.

காசினியுடன் இணைந்த ஆய்வுக்கலமான ஹைஜன்ஸ், இரண்டு நாட்களுக்கு முன்னர், டைட்டானில் தரையிறங்கியது. ஹைஜன்ஸ் ஆய்வுக்கலத்தில் இணைக்கப்பட்டுள்ள கமராக்கள், டைட்டானின் தரைத்தளத்தை படம்பிடித்து அனுப்பியுள்ளன.

டைட்டான் கோள், புதன் கிரகத்தைவிடப் பெரியது. இந்தக் கோளத்தில் மீதேன்வாயு மண்டிக் கிடக்கிறது. மைனஸ் பனிப்பாளங்கள் நிறைந்த இந்தக் கோளத்தின் தரைபரப்புக்குக் கீழ் கடல்கள் இருக்கலாம் என விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

இந்தக் கோளத்தில் மேலும் என்னென்ன வேதிப்பொருட்களும், தாதுக்களும் இருக்கின்றன என்பது பற்றிய ஆய்வு தொடர்கிறது. (து)

# திருவிழாவில் துப்பாக்கிச் சூடு

## பிலிப்பைன்சில் ஏழு பேர் பலி

(மணிலா)

பிலிப்பைன்ஸ் நாட்டில் கிறிஸ்தவ மக்களின் திருவிழாவின்போது நடந்த துப்பாக்கிச் சூட்டில் உயர் பொலிஸ் அதிகாரி உட்பட ஏழுபேர் கொல்லப்பட்டனர்.

பிலிப்பைன்ஸ் நாட்டின் மத்திய பகுதியில் உள்ள அக்லான் மாகாணத்தைச் சேர்ந்தது காலிஹோ நகரம்.

ரோமன் கத்தோலிக்கப் பிரிவைச் சேர்ந்த சாந்தோ நினோ என்பவரை நினைவில்கொள்ளும் பொருட்டு ஆண்டுதோறும் இப்பகுதி மக்கள் பெரிய விழா ஒன்றை நடத்துவது வழக்கம்.

நேற்றுமுன்தினம் இந்தத் திருவிழா வழக்கம்போல் துவங்கிய போதே இச்சூட்டுச் சம்பவம் நடைபெற்றது.

அகலான் மாகாணத் தலைமைப் பொலிஸ் அதிகாரி நேற்றுமுன்தினம் காலை சிறப்புப் பிரார்த்தனையில் கலந்துகொண்டபின், அருகில் உளள ஒரு அரச கட்டடத்தை நோக்கி நடந்து சென்றார்.

அவருடன் நூற்றுக்கணக்கானவர்கள் சென்றுகொண்டிருந்தனர். அப்போது ஒருவன் அவர்கள் மீது சரமாரியான துப்பாக்கியால் சுட்டதில் பொலிஸ் அதிகாரி உட்பட ஏழுபேர் கொல்லப்பட்டனர். 30பேர் படுகாயமடைந்தனர்.

திருவிழாத் தொடங்கும் முன் பட்டாசு கொளுத்தப்படும் நேரத்தில்தான் இந்தத் துப்பாக்கிச்சூடு நடந்துள்ளது.

சம்பவத்தில் ஈடுபட்டவன் போதை மருந்து அருந்தும் ஆளாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்பட்டாலும் பிற காரணங்கள் ஏதேனும் உண்டா என்பது குறித்தும் விசாரித்து வருகிறோம் என்று பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார். (து)

# அபுகிரைப் சிறையில் கைதிகள் சித்திரவதை

## அமெ.இராணுவ வீரருக்கு 15 ஆண்டுகள் சிறை

ஈராக் அபுகிரைப் சிறையில் கைதிகளைச் சித்திரவதைசெய்த அமெரிக்க இராணுவ வீரருக்கு 15 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

ஈராக்கில் சதாம்ஹுசேன் ஆட்சியைப் போர்மூலம் அமெரிக்கா வீழ்த்தது. சதாம் ஹுசேனுக்கு ஆதரவாகப் போரிட்ட, செயல்பட்ட ஆயிரக்கணக்கான இராணுவவீரர்கள் மற்றும் நபர்களை அமெரிக்க, பிரிட்டன் படைகள் கைதுசெய்து சிறையில் அடைத்துள்ளன. அவற்றில முககியமானது அபுகிரைப்சிறை. அமெரிக்கா, பிரிட்டன் இராணுவ வீரர்களின் கட்டுப்பாட்டில் இது இருக்கிறது.

இச்சிறையில் கைதிகளை அடித்து, நிர்வாணப்படுத்தி செக்ஸ் சித்திரவதை செய்தது உட்பட பல கேவலங்களை அமெரிக்க, பிரிட்டன வீரர்கள் அரங்கேற்றினர். அவர்களில் ஒரு பெண் வீரரும் அடங்குவார். கைதிகள் சித்திரவதை செய்யப்படும் காட்சிகள் அடங்கிய புகைப்படங்கள் பத்திரிகை, ரீ.விகளில் வெளியிடப்பட்டன. உலகம் முழுவதும் இது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

'அமெரிக்காவின் இராணுவத்தின் மீது ஏற்பட்ட கறை' என்று இச்சம்பவம் பற்றி அமெரிக்க அதிபர் புஷ் கவலை தெரிவித்தார். இராணுவத்தில் உள்ள சில போக்கிரிகள் இதுபோன்ற அசிங்கத்தை செய்துள்ளனர் என்று அமெரிக்க இராணுவ அமைச்சர் டொனால்டு ரம்ஸ்பீல்டு கூறினார்.

கைதிகளைச் சித்திரவதை செய்தவர்களில் முக்கியமானவர் சார்லஸ் ஏ.கிரானர். 36 வயது அமெரிக்க இராணுவ வீரரான இவர், கைதிகளை இரும்புத்தடியால் அடித்துச் சித்திரவதை செய்தார். கைதிகளை நிர்வாணப்படுத்தி செக்ஸ் உணர்ச்சியைத் தூண்டிவிட்டு வேடிக்கை பார்த்தார்.

அமெரிக்காவில் டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள இராணுவ நீதிமன்றில் இவர் மீதான குற்றச்சாட்டு குறித்து கடந்த வெள்ளியன்று விசாரணை நடந்தது. பத்து நீதிபதிகள் கொண்ட குழு ஐந்து மணிநேரம் விசாரணை நடத்தியது. பின்னர் கிரானரை குற்றவாளி எனறு அறிவித்தது. அவருக்கு 15 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்தது.

விசாரணைக்காக நீதிமன்றுக்கு வந்த கிரானர், 'உயரதிகாரிகளின் உத்தரவுக்குக் கட்டுப்பட்டு இதை எல்லாம் செய்தேன்' என்றார். நீதிபதிகள் அதை ஏற்கவில்லை. நீதிபதிகள் தண்டனை விதித்தபோது, நெஞ்சையும், தலையையும் நிமிர்த்தி நேராக நின்றார். தண்டனைக்குக் கவலைப்பட்டது போல் தெரியவில்லை. அவருடைய தாயும் தந்தையும் ஒருவரை ஒருவர் கட்டிப் பிடித்து ஆறுதல் கூறிக்கொண்டனர். (ப)

WORLD NEWS

உலக தரிசனம்



சுனாமியால் உயிரிழந்தவர்களின் ஆத்மா சாந்தியடையவும், பாதிக்கப்பட்டவர்கள் விரைவில் மன நிம்மதி அடையவும் ஹிந்தி நடிகர் விவேக் ஓபராய். அவரது ஆன்மீக குரு சித்தானந்தா சரஸ்வதி சுவாமிகள் ஆகியோர் கூட்டுப் பிரார்த்தனை நடத்தியபோது எடுத்த படம்.

# 1500கோடிரூபா பெறுமதியான ஆயுதங்களை ஈரானிடமிருந்து இலங்கை அரசு கொள்வனவு

## ஜனாதிபதியின் ஏற்பாட்டில் நடவடிக்கை

(கொழும்பு)

**முப்படைகளுக்குமென ஆயிரத்து 500 கோடிரூபா பெறுமதியான ஆயுத தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தத்தை ஈரானுடன் இலங்கை அரசாங்கம் செய்துகொள்ளவிருப்பதாகத் தெரியவருகிறது.**

இந்த ஆயுதக் கொள்வனவு உடன்பாட்டில் உள்ளடக்கப்படவுள்ள ஆயுத தளபாடங்கள தொடர்பாக ஆராய்வதற்காக உயர்மட்ட இராணுவ கடற்படை விமானப் படை அதிகாரிகளைக் கொணட குழுவொன்று கடந்தவாரம் ஈரானியத் தலைநகர் தெஹ்ரான சென்றுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஈரானுக்குச் சென்றிருந்த போது பாதுகாப்பு ஒத்துழைப்பு இணக்கப்பாடு ஒன்று எட்டப்பட்டிருந்தது.

இதனடிப்படையிலேயே இந்த ஆயுதக் கொள்வனவு இடம்பெற்றுள்ளது. ஏற்கனவே ஈரானுக்குச் சென்றிருந்த விமானப் படை அதிகாரிகள் குழுவொன்று அங்கு கொள்வனவு செய்யவேண்டிய ஆயுதங்களின் பட்டியல் ஒனறைத் தயார் செய்திருந்தது.

தற்போது ஈரானுக்குச் செனறிருக்கும் முப்படை அதிகாரிகள குழு ஆயுத தளபாடஙகளைட் பார்வையிட்டு அவற்றில தேவையானவற்றை பாதுகாபபு உடனபடிக்கையில் உள்ளடக்க நடவடிககை எடுக்கபபடவுள்ளது.

இந்தக் குழுவினர் ஈரானில் படையினருக்கான பீரங்கிகள், ரவைகள் மற்றும் ஜீப் வண்டிகளுடன் விமானப்படைக்குத் தேவையான ஈரானில் தயாரிக்கப்பட்ட நவீன தாக்குதல் விமானம் மற்றும் கடற்படைக் கப்பல்களையும் கொள்வனவு செய்யவுள்ளனர்.

இலங்கைப் படையினருக்கு ஈரானிலிருந்து பெருமளவு படைக்கலங்கள் கொள்வனவு செய்யப்படுவது இதுவே முதற்தடவை.

ஈரானுக்கு விஜயம் செயவதற்கு முன்னர் இந்தக் குழுவினர் கடந்த புதன்கிழமை ஜனாதிபதியைச் சந்திபபதறகாக ஜனாதபதி மாளிகைக்கு அழைக்கப்பட்டபோதும், ஜனாதிபதி தனது வேலைப்பளு காரணமாக அவர்களைச் சந்திக்கவில்லை. எனினும், ஜனாதிபதியின் வழிகாட்டலில் இறுதிநேரத்தில் ஒருங்கிணைந்த நடவடிக்கைத் தலைமையகத்தின் கணக்காளர் விமலசேன இந்தக் குழுவில் இணைத்துக்கொள்ளப்பட்டார்.

ஈரான் சென்றுள்ள இந்தக் குழுவினர் கொள்வனவு செய்யும் ஆயுத தளபாடஙகளை அஙகேயே பரீட்சித்துப் பார்க்கவுள்ளனர். ஆயுத தளபாடங்களின் தரத்தை உரியமுறையில தெரிநதுகொண்ட பின் ஜனாதிபதியுடன் தொலைபேசி மூலம் உரையாடி உடனடியாக மேற்கொள்ளவேண்டிய விடயங்கள் தொடர்பாகவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆயுத தளபாடங்களை உடனடியாக விலைக்குப் பெற்றுக்கொள்ள வேண்டியிருப்பின் அவற்றை வாங்குவதற்கே கணக்காளர் இந்தக் குழுவில் இணைததுககொளளபபடடுளளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஈரானுக்குச் சென்றுள்ள படை அதிகாரிகளின் குழுவில் இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சாநத கொட்டேகொட, கடற்படைத் தலைமையதிகாரி நியா அட்மிரல் மொகான் விஜயவிக்கிரம, விமானபபடை பொறியியல இயக்குநர் எயார் வைஸ் மார்ஷல் லாப் பெரேரா, மற்றும் 52 ஆவது டிவிசன தளபதி பிரிகேடியர் நிமால் ஜெனசூரிய, கடற்படை பொறியியல் பிரிவு இயககுநர் டி.என்.தர்மவீர, காங்கேசன்துறை உததர கடறபடைத் தளத்தின் கட்டளை அதிகாரி கப்டன் ஏ.டி.நாணயக்கார, கடற்படையின் இலத்திரனியல் பிரிவு இயக்குநர் கொமடோர் வெற்றிகம, விமானப்படையின் இலத்திரனியல் பொறியியலாளர் பிரிவு கடடளை அதிகாரி குறூப் கபடன் றொகான் பதிரகே மற்றும் பாதுகாப்பு அமைச்சின் கணக்காளர் விமலசேன ஆகியோரும் அடங்கியிருபபது குறிப்பிடத்தக்கது. (ப-4,9)

## கடல்வள ஆசிரியர்களுக்கு!

(யாழப்பாணம்)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் உள்ள பாடசாலைகளில் கடல்வள தொழில்நுடபத்தினைக் கற்பித்துக்கொண்டிருந்த ஆசிரியர்கள் முதலாம் தவணைக்காகப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதால் இடைவிடாது தொடர்ச்சியாகப் பாடசாலைகளில் கற்பித்தல் செயறபாட்டில் ஈடுபடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன, இவ் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கபபடடிருப்பதனால் கொடுபபனவுக்குரிய மாதாந்த வரவை உறுதிப்படுத்திய கடிதத்துடன் எதிர்வரும் 21ஆம் திகதி பி.ப. 2.00மணிக்கு யாழ்.மாவட்ட கலவி மேம்பாட்டு பேரவை அலுவலகத்தில் (யாழ.கலவிவலயம்) தவறாது சமூகம்தரும்படி தமிழீழ கல்விக்கழகம் கேடடுள்ளது. (ற)

## விபரம் சேகரிப்பு

(மருதங்கேணி)

சுனாமி பேரலை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ள காலநடைப் பண்ணையாளர்கள் தொடர்பான விபரங்களைத் திரடடுவதற்கு கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் நடவடிககையை மேற்கொண்டுள்ளது.

இவ்வாறு திரட்டப்படும் விபரங்களைக் கொண்டு எதிர்காலத்தில் நடைபெறவுள்ள கால்நடை வளர்ப்புத் தொடர்பான புனர்வாழ்வுத திட்டங்களை வகுப்பதறகு இது பேருதவியாக இருக்குமெனத் திணைக்களம் எதிர்பார்க்கிறது. (ப-35)

ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தினூடாக

## இந்திய அரசின் உதவுபொருட்கள் இடம்பெயர்ந்தோருக்கு விநியோகம்

(மருதங்கேணி)

இந்திய அரசாங்கத்தால் வழங்கப்பட்ட ஒரு மில்லியனுக்கு மேற்படட நிவாரணப்பொருட்கள் பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷண சாரதா சேவாச்சிரமத்தினரால இடம்பெயாந்தோருக்கு வழஙகப்படடது.

சமைத்த உணவுப்பொருட்கள், உலர்உணவு வகைகள், உடுபுடவைகள், பாலுணவுகள், பாத்திரங்கள், பாய்கள், கூடாரங்கள், மருந்துவகைகள் என்பன இந்த நிவாரணப்பொருட்களில் அடங்கியுள்ளன.

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் திருமதி நிருபமாராவ் சிலதினங்களுக்கு முன்னர் பருத்தித்துறைக்கு நேரடியாக வந்து இந்த நிவாரணப்பொருட்களை சேவாச்சிரம பீடாதிபதி சுவாமி சித்ரூபானநதாவிடம கையளித்தார்.

அதனைத் தொடர்ந்து இந்த இடம்பெயர்ந்தோர்க்கான பொருடகள பங்கிட்டு வழங்கப்பட்டுவருகின்றன. (ப-35)

## தும்பளை கிழக்கு ச.ச. நிலையம்
## பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி

(மருதங்கேணி)

தும்பளை கிழக்குப் பகுதியில் சுனாமி அனர்த்தங்களால் வீடுகளை இழந்தவர்களுககு வீடுகளை அமைத்துக்கொடுக்கவும், தேவையான உதவிகளை வழங்கவும் தும்பளை கிழக்கு சனசமூக நிலையம் முன்வந்துள்ளது.

புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் தும்பளை கிழக்கு கிராமத்தைச் சோந்தவர்களின் நிதி உதவிகளையும், சனசமூகநிலையத்தின் நிதியையும் கொண்டு இந்த உதவிகளை வழங்க முன்வந்துள்ளது.

வீடுகளை மீள அமைப்பதறகான உதவி தொடர்பாகத் திட்ட மதிப்படு தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக சனசமூகநிலையச செயலாளா காபுஸ்ய ராசா தெரிவித்தார். (ப-35)

## மாவட்ட மட்டத்தில் முதலாமிடம்



கிளிநொசசி புனித திரேசா மகளிர் கல்லூரியில் உயர்தரத்தில் கல்வி கற்றுவரும் வைஷ்ணவ் மனோகரன் மக்கள் வங்கியினால் நடாத்தப்பட்ட சிசு உதான புலமைப்பரிசில் பரீடசையில் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இவருக்கான விருதும், பாராட்டுப் பத்திரமும் 15 ஆயிரம ரூபா பணப்பரிசிலும் அண்மையில் வழங்கப்பட்டது.

மேலும் இவரது படிப்பிற்காக மாதா மாதம் 2ஆயிரத்து 500ரூபா வீதம் மக்கள் வங்கியால் வழங்கப்பட்டுவருகின்றது.

இவர் மேற்படி பாடசாலையில் க.பொ.த சாதரணதரப் பரீட்சையில் ஒரே அமர்வில் 10ஏ பெற்றமையும் குறிப்பிடத்தககது. (ற)

## சமாதான நீதிவான் நியமனம்



கரவெட்டி மத்தியைச் சேர்ந்த தம்பிமுதது அரிபிரசாதம் பருத்தித்துறை மாவட்ட நீதிபதி அரியநாயகம் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக அண்மையில் சததியப்பிரமாணம செய்துகொண்டார்.

இவர் சிறந்த சமூக சேவையாளரும் முன்னாள் இலங்கை சீனிக்கூட்டுத்தாபன விவசாய உத்தியோகத்தரும், நாமகள் சனசமூகநிலைய செயலாளரும், கிறிஸ்தவ தொழிலாளர் ஒத்துழைப்பு அமைப்பு செயலாளரும் ஆவார்.

அத்துடன் இவர் தற்போது வதிரி ஸ்ரீபரமானந்த சிறார் முதியோர் இல்ல ஆச்சிரம உபபொருளாளராகவும் கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரியின் பெற்றோர் ஆசிரியர் சங்கச் செயலாளராகவும் உள்ளதுடன், பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளரும் ஆவார். (ற)

கிரிக்கெற் போட்டியின் நிதி தொடர்பில்

## ஜே.வி.பி, ஹெல உறுமயவின் கருத்துக்கு வேல்ட் விஷன் கடும் கண்டனம்

(கொழும்பு)

சுனாமி நிவாரண நிதிக்காக அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற உலகநாடுகள் பங்கு கொண்ட கிரிக்கெற் போட்டியில கிடைத்த நிதி மதமாற்றத்திற்குப பயன்படுததப்பட்டிருககவேண்டும் என ஜே.வி.பியினரும், ஹெல உறுமயவும தெரிவித்திருநத கருத்திற்கு சர்வதேச அரச சார்பற்ற நிறுவன மான வேல்ட் விஷன் தனது கண்டனத்தை வெளியிடடுள்ளது.

இந்நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் சித்மினி பெரேரா இதுவிடயம் குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில்,

நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டியநேரத்தில் இக்குற்றச்சாட்டுகள் அடிப்படையில்லாதவை. மேற்படி கிரிக்கெற் போட்டியில் 2.6 மிலலியன் அமெரிக்க டொலா நிதி கிடைத்துளளது. இது பாதிக்கப்பட்ட 9 நாடுகளுக்கு அனுப்பிவைக்கப்படும். இதனை நாம் தவறாகப் பயன்படுத்துகிறோம் என யாரும் கருதமுடியாது. மேற்படி கிரிக்கெற் போட்டி சர்வசேத கிரிக்கெற் சபையுடன் இணைந்தே நடாத்தப்பட்டது என்றும் கூறினார்.

கடந்தவாரம் ஜே.வி.பி, ஹெல உறுமய என்பன மேற்படி நிதி கிறிஸ்தவ அமைப்பிடம் கையளிக்கப்பட்டது தொடர்பில் அரசாங்கம் விசாரணை நடதத வேண்டும். இந்நிதி பௌத்தர்களை கிறிஸ்தவர்களாக மாற்றுவதற்குப் பயன்படுவதாகவும் குற்றஞ்சாட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற-6)

## விபரங்களைத் திரட்டுவதற்கான ஒருதொகுதி படிவங்கள் வந்துள்ளன

(யாழ்ப்பாணம்)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்கள் விநியோகம் தொடர்பான விபரங்களை பெறுவதறகு சமூகசேவைகள் திணைக்களத்தில் இருந்து எஸ்.எஸ்.டி-16, எஸ்.எஸ்.டி-9, எஸ்.எஸ்.டி-8 என்ற பெயருடைய ஒரு தொகுதி விண்ணப்பப்படிவங்கள் நேறறு யாழ். மாவட்ட செயலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இப்படிவங்கள் மிக விரைவில் பூர்த்திசெய்து தமக்கு அனுப்பும்படி சமூகசேவைகள திணைக்களம் கேட்டுள்ளது.

இப்படிவங்களை நிரப்புவதற்கு கிராமசேவையாளர்கள், பட்டதாரிப் பயிலுநர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் ஆகியோரையும் பயன்படுத்தும்படி கேட்கபபடடுள்ளது. (ற-19)

## முக்கிய கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலை வளாக பரீட்சைக்குத் தோற்றிய இறுதி வருட மாணவர்கள் அனைவரையும் முக்கிய விடயம் ஒன்றைக் கலந்துரையாடுவதற்கு ஏதுவாக வளாக நடேசர் அரங்கில் எதிர்வரும் 20ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு ஒன்றுகூடுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ற)

குணநலம் சான்றோர் நலனே பிறநலம்
எந்நலத்து உள்ளதூஉம் அன்று - குறள்

வலம்புரி

# சமாதானப் பேச்சுக்களை நிவாரணப் பணியே தீர்மானிக்கும்

சுனாமி அனர்த்தத்தோடு சமாதானம் பற்றிய பேச்சுக்கள் கைவிடப்பட்டுவிட்டதோ என்ற மன உணர்வு மக்களிடம் ஏற்படத் தொடங்கியுள்ளது.

இயற்கை அனர்த்தம் இலங்கையின் கடனைத் தீர்ப்பதற்கு உதவி செய்துள்ளது. இலங்கை பட்ட கடன் என்பது நாட்டின் அபிவிருத்திக்காக அல்ல. மாறாக தமிழ் மக்கள் மீது யுத்தம் நடத்துவதற்கான ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்காக உலக நாடுகளிடம் இருந்து பெறப்பட்ட கடன்களே அவையாகும்.

இலங்கைக்கு கடன் வழங்கிய நாடுகள், யுத்தத்தை நிறுத்தி நாட்டை அபிவிருத்தி செய்யுங்கள் என்ற ஆலோசனை எதனையும் வழங்காது கேட்கப்பட்ட கடன்களையும், உதவிகளையும் தாராளமாக வழங்கியது.

தாம் வழங்குகின்ற கடன்களும், உதவிகளும் தமிழின அழிப்பிற்குப் பயன்படுத்தப்படுகின்றதென்ற உண்மையை உணர்ந்துகொண்டபோதிலும் இலங்கை அரசுக்கு கடன் வழங்குவதில் வெளிநாடுகள் ஆர்வம் காட்டின.

இதற்குப் பல காரணங்கள் உண்டு. இலங்கைக்கு கடன் வழங்குவதன் மூலம் வட்டிக் கொடுப்பனவுகளை இலாபமாக உழைக்க முடியும் என்பதும், உள்நாட்டு யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இலங்கைக்கு கடன் வழங்குவதன் மூலம் யுத்தத்தை ஊக்குவித்து தமது நாட்டு ஆயுதங்களையும் அந்நாட்டிற்கு விற்று இலாபம் உழைக்க முடியும் என்ற நோக்கிலேயே அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகள் இலங்கைக்கு கடனை வழங்கி வந்தன.

இலங்கை அரசுகளும், வரட்டுக் கௌரவம், பௌத்த சிங்களம் என்ற இனவாதப் போக்கினால் அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளின் சூழ்ச்சிக்குள் அகப்பட்டு, உள்நாட்டில் பெரும் யுத்தத்தை நடத்தி வந்தது.

எனினும், தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டத் திறனை முறியடிக்க முடியாத இலங்கை, அமெரிக்கா, இந்தியா, இஸ்ரேல், பாகிஸ்தான், பிரிட்டன் என்று எல்லா நாடுகளிடமும் கையேந்தியது.

தமிழ் இனத்திற்கு எதிரான யுத்தத்தை நடத்த இலங்கை அரசுக்கு ஆயுதங்களையும், இராணுவப் பயிற்சிகளையும் வழங்கி ஆசீர்வதித்த நாடுகள் விடுதலைப் புலிகளின் தாக்குதல் திறனைக் கண்டு கலங்கிப் போயின.

இலங்கைக்கு கடன் உதவி வழங்கியதும், ஆயுதங்களை விற்றதும் பெரும் தவறாகிவிட்டது என்ற உண்மையை உலக நாடுகள் காலம் கடந்தே புரிந்து கொண்டன.

தமிழ் மக்களுக்கெதிராக யுத்தத்தை நடத்தி வரும் இலங்கைக்கு உதவ வேண்டாம் என தமிழ்த் தலைவர்கள் உலக நாடுகளிடம் பல தடவைகள் கேட்டிருந்தனர். இருந்தும் அவர்களின் கோரிக்கைகளை உலக நாடுகள் செவி மடுக்கவில்லை.

மாறாக தொடர்ந்தும் உதவி வழங்கி வந்தன. இலங்கைப் படைகளுடனான போர்த் தொடுகையில் விடுதலைப் புலிகளின் போராட்டத் திறன் வெளிப்பட்டபோதே உலக நாடுகள் தமது பார்வையை இலங்கை மீது திசை திருப்பின.

சமாதானத்தை ஏற்படுத்துமாறு அரசிற்கு அழுத்தம் கொடுத்தன. சமாதானத்தை ஏற்படுத்தினால் மட்டுமே உலக நாடுகளின் நிதியுதவி கிடைக்கும் என பயமுறுத்தின. வெளிநாடுகளின் பயமுறுத்தலுக்கு இலங்கை அரசு பணியவே செய்தது.

நிலைமை இவ்வாறாக இருந்தவேளையில், சுனாமி ஏற்படுத்திய அழிவு, ஆயுத விற்பனையால் வெளிநாடுகள் பெற்ற இலாபத்தை உதவி என்ற பேரில் மீளவும் திருப்பி அனுப்பியுள்ளது.

இந்நிலையில், நிவாரண கொடுப்பனவுகளை வழங்குகின்ற நாடுகள் தாம் வழங்கிய நிவாரணக் கொடுப்பனவுகள் தமிழர் பகுதிகளுக்கும் சமமாக வழங்கப்பட வேண்டும் என்பதை அரசுக்கு அழுத்தம் திருத்தமாக தெரிவிக்கவும், நடைமுறைப்படுத்தவும் வேண்டும். இது சமாதானப் பேச்சுக்கள் தொடர்வதற்கான வாய்ப்பாக அமையும்.

# நாட்டைக் கட்டியெழுப்ப அனைத்துக் கட்சிகளும் தொடர்ந்தும் ஒன்றிணைய வேண்டியது அவசியம்

## ஜனாதிபதி வலியுறுத்து



(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு அனைத்துக் கட்சிகளின் ஒத்துழைப்பினையும் எதிர் பார்ப்பதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

பல அரசியல் கட்சிகள் இச்சந்தர்ப்பத்தில் சுனாமி பேரலையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதில் அரசுடன் இணைந்து செயற்பட்டுவருகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் நடைபெற்ற தொழில்நுட்ப நிறுவனம் ஒன்றின் திறப்பு விழாவில் உரையாற்றுகையிலே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுவரை சின்னஞ்சிறிய விடயங்களுக்கே அரசியல் கட்சிகள் சண்டைபிடித்துக் கொண்டிருந்தன. ஒன்றிணைந்து செயற்படாத அரசியல் கட்சிகளும் அதன் தலைவர்களும் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம் என்பது குறித்தே தற்போது பேசி வருகின்றனர்.

எனினும், அவர்கள் அடுத்து என்ன செய்வார்களோ எனத் தெரியாது எமது அழைப்பினை ஏற்று ஒன்றுபட்டு அவர்கள் செயறபடுகின்றனர். தொடர்ந்தும் அவ்வாறே செயற்பட வேண்டும.

எதிர்க்கட்சிகளும் தமது பூரண ஆதரவினை வழங்கி வருகின்றது. அதனைவிட நாட்டைக் கட்டியெழுப்புவதில் அவர்களின் பூரண ஒத்துழைப்பினை மென்மேலும் எதிர்பார்க்கின்றோம்.

நாட்டின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு செயற்பட்டால் சுனாமித் தாக்கத்தினால் ஏற்பட்ட அழிவினை மிக விரைவில் வெற்றிகொள்ள முடியும் என ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (ந-4)

# நாட்டின் மீள்கட்டுமாணப் பணிகளில் புலிகளையும் இணைக்க அரசு தீவிரம்

## உள்நோக்கம் உண்டென அரசியல் அவதானிகள் விமர்சனம்

(கொழும்பு)

ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் மீள்கட்டுமாணப் பணிகளில் விடுதலைப் புலிகளையும் இணைத்துச் செயற்பட அரசாங்கம் தீவிர முயற்சிகளை மேற்கொண்டுவருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

வடுதலைப் புலிகளை இணைத்து செயற்படுவதன் மூலம் விடுதலைப் புலிகளுக்கு சர்வதேச உதவிகள் நேரடியாகக் கிடைப்பதைத் தடைசெய்வதே அரசாங்கததின் நோக்கம் என அரசியல் அவதானிகள் விமர்சித்துள்ளனர்.

இதேவேளை, விடுதலைப் புலிகளையும் இணைத்து புனர்வாழ்வு புனரமைப்பு நடவடிக்கைகளைத் துரிதமாக மேற்கொள்வதறகு அரசாங்கம் கடும் முயற்சிகளை மேற்கொண்டுவருவதாக நாட்டை மீளக்கட்டியெழுப்பும் நடவடிக்கைக்குழுவின் தலைவர் மனோதித்தவெல தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அரசாங்கத்தின் இந்த முயற்சியினை சர்வதேச நாடுகள் பாராட்டுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ந-4)

# 'பொங்கு தமிழ்' 4ஆம் ஆண்டு நிறைவு நேற்று யாழ்.பல்கலையில் நடைபெற்றது

(யாழ்ப்பாணம்)

பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வின் 4ஆம் ஆண்டு நிறைவு நாள் நிகழ்வு நேற்று யாழ். பல்கலைக்கழகத்தில் மிகவும் உணர்வுபூர்வமாக நடைபெற்றது.

நேற்றுக்காலை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ். செல்வக்குமார் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில பொதுச்சுடரை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ.மோகனதாஸ், யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பெறுபபாளர் சி.இளம்பரிதி, யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் அருள்வேலன், யாழ். கலைப்பீடாதிபதி இரா. சிவச்சநதிரன், யாழ். மாவட்ட மனிதநேய அமைப்பின் தலைவர் பரமநாதன் மற்றும் யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்க உறுப்பினர் ஆகியோர் எற்றி வைத்தனர்.

தமிழீழத் தேசியக் கொடியினை யாழ். மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவிழி ஏற்றி வைத்தார். தொடர்ந்து பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள பொங்குதமிழ் எழுச்சியைக குறித்து நிற்கும் பெயர்ப் பலகைகது வணிக பீடாதிபதி தேவராஜா மலர் மாலை அணிவித்தா. தொடர்ந்து இம் மண்ணுக்காக தமது உயிர்களை அர்ப்பணித்த மாவீரர்களை கௌரவிக்கும் முகமாக பல்கலைக்கழக வாசலில் அமைக்கப்படவுளள நினைவாலயத்திற்கான அடிக்கல்லை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் நாட்டினார்.

தொடர்ந்து யாழ். ...க்கழக கைலாசபதி அரங்கில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. எஸ். செல்வக்குமார் தலைமையுரை நிகழத்தினார். வரவேற்பு...ரயை கலாநிதி சிதம்பரநாதனும் சிறப்புரைகளை துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், யாழ். மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் சி. இளம்பருதி யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் ஆகியோரும் நிகழ்த்தினர்.

தொடர்ந்து பெண்கள் பண்பாட்டுக் குழுவின் பொங்குதமிழ்ப் பாடல்களை இசைத்து நிகழ்வை நிறைவு செய்தனர்.

இந்நிகழ்வில் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.கே. சிவாஜிலிங்கம், கே. சிவநேசன், பத்மினி சிதம்பரநாதன், யாழ். பல்கலைக்கழக பொருளியற்துறைத் தலைவர் பேராசிரியர் சிவநாதன் ஆகியோர் உட்பட பல்கலைக்கழக சமூகத்தினர், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ந-43,5,95)

# முன்னோடித் தேர்வு

(யாழ்ப்பாணம்)

சைவபரிபாலன சபையினால் வருடா வருடம் நடாத்தப்படும இந்து நாகரிகம், இந்து சமயம் ஆகிய பாடங்களின் முன்னோடிததேர்வு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 21,22ஆம் திகதிகளில நடைபெறவுள்ளது.

இமமுன்னோடிப் பரீட்சையானது இவ்வருடம் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் இந்து நாகரிகம் அல்லது இந்துசமய பாடத்தில் தோற்றவுள்ள மாணவர்களது நன்மை கருதியே நடாத்தப்படுகின்றது.

இப்பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்கள் ஒவ்வொரு பாடசாலைகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அவ்விணணப்பப் படிவங்கள் யாவும் பூர்த்தி செய்து எதிர்வரும் 31ஆம திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கப்பட வேண்டுமென தேர்வுச் செயலர் வ.கந்தசாமி கேட்டுள்ளார். (ந-19)

# டென்மார்க்கில் அஞ்சலி

(தென்மராட்சி)

சுனாமி அனர்த்தத்தினால் இலங்கையில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக டென்மார்க்கின் 'கோண்டபேர்க்' நகரத்தில் மெழுகுவர்த்தி அஞ்சலி நிகழ்வு கடந்த ஞாயிறன்று நடாத்தபபட்டது.

கோண்டபேர்க் நகரத்தின் முதல்வர் ஏ.பி.ஹான்சன் ஆர் இந் நிகழ்வில் பங்கு கொண்டு, அஞ்சலி உரை நிகழ்த்தினார்.

டென்மார்க்கின் கோண்டபேர்க் நகரத்தின் தமிழ் பிரமுகரான கே.மகேஸ்வரனின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும். (ப-16)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

உங்களுக்குக் கடவுள் நம்பிக்கை இருக்குமானால், நீங்கள் கிறிஸ்தவராக இருப்பீர்களானால் உமது சித்தம் செயல்படுவதாக என்று நாள் தோறும் திரும்பத்திரும்பச் சொல்கிறீர் களே, அதன் பொருள் என்ன என்று சற்றே சிந்தித்துப் பாருங்கள்! உமது சித்தம் செயல்படுவதாக என்று சொல்கின்ற ஒவ் வொரு நொடியும் உண்மையில் ஓ ஆண்டவனே! எனது சித்தத்தை நிறைவேற்றி வைப்பீராக! என்பதையே அப்படிச் சொல்கிறீர்கள்.

சுவாமி விவேகானந்தர்

# 6 மாத காலத்துக்குள் இயல்புநிலையை ஏற்படுத்த ஒன்றிணைந்து செயல்படுவோம்

## எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அழைப்பு

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்க்கையை இயல்புநிலைக்குக் கொண்டுவருவதற்கான செயற்திட்டம் ஆறுமாத காலப்பகுதியில் பூர்த்திசெய்யப் படவேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக் கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த அனர்த்தத்தினால் பொருளாதாரத்திற்கு வரைய றுக்கப்பட்ட அளவிலேயே பாதிப்பு ஏற்பட்டுள்ளதால் மக்கள் வாழ்க்கையை கட்டியெழுப்ப பூரண அர்ப்பணிப்பு டன் செயற்படவேண்டுமென அவர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற ஐக்கிய நிவாரணசேவையின் விசேட கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரி வித்தார். அனைத்து நிவாரணங்களும் பாதிக்கப்பட்ட வர்களுக்கு நேரடியாக வழங்கப்படவேண்டும். ஜுலை மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் மக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்குக் கொண்டுவருவதற்கான குறிக்கோளில் சகலரும் ஒன்றிணைந்து செயற்படவேண் டும் என அவர் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை, இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப் பட்ட மக்களின் வாழ்க்கையை இயல்புநிலைக்குக் கொண்டுவருவது தொடர்பான ஆலோசனைத் திட்ட மொன்றை ஐக்கிய தேசியக்கட்சி ஜனாதிபதியிடம் சமர்ப்பித்துள்ளது.

இந்த ஆலோசனைத் திட்டத்தினை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியிடம் கையளித்ததாக பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படுகின்ற நிவாரணங் கள் நேரடியாகக் கிடைப்பதற்கு கூடிய கவனம் செலுத்தப் படவேண்டும் என சுட்டிக்காட்டப்பட்டதாகவும் அவர் தெரி வித்தார். (த-4)

# சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிக்கவேண்டும்

## கனடியப் பிரதமர் போல் மார்ட்டின்

சுனாமியால் பாதிக்கப்பட்ட இலங்கையைக் கட்டியெழுப்புவ தற்கான இலங்கை அரசாங்கத் தின் திட்டத்திற்கு பூரண ஆதர வினையும், சகல உதவிகளையும் வழங்குவதாக கனடாப் பிரதமர் போல் மார்ட்டின் தெரிவித்துள் ளார். கொழும்பில் நேற்று நடை பெற்ற செய்தியாளர் மாநாட்டி லேயே அவர் இதனைத் தெரி வித்தார்.

தமது அரசாங்கம் மனிதாபி மான உதவியுடன் சகல உதவி களையும் வழங்கும். சம்பந்தப் பட்ட சகலரும் கட்சிபேதங்களை மறந்து நாட்டை மீளக்கட்டியெழுப் பும் முயற்சிக்கு ஒன்றுபடவேண் டும் என்று அவர் வலியுறுத்தினார்.

இடைநிறுத்தப்பட்டுள்ள சமா தானப் பேச்சுவார்த்தை இந்தக் காலப்பகுதியிலாவது வெற்றிகர மாக மீள ஆரம்பிக்கப்படவேண் டுமென அவர் வேண்டுகோள் விடுத் திருந்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுட னான சந்திப்பின்போது நிவாரண நடவடிக்கைகளுடன், முன்சொன்ன அம்சத்தையும் வலியுறுத்தியதாக அவர் தெரிவித்தார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட கல்முனைப் பகுதிகளை சுற்றிப் பார்வையிட்ட பின்னர் கொழும்பு திரும்பிய அவர் ஜனாதிபதி சந் திரிகா குமாரதுங்கவையும், பிரத மர் மகிந்த ராஜபக்ஷவையும் சந் தித்துவிட்டு மாலை 6 மணியள வில் இந்தியா புறப்பட்டுச் சென் றார். (த-04)

# சுகாதாரத் தொண்டர் 300 பேருக்கு பயிற்சி

(யாழ்ப்பாணம்)

சுனாமி அனர்த்த புனர்வாழ்வு கூட்டுச் செயலணியின் சுகாதார சேவைகள் ஒருங்கிணைப்புச் செய லகம், சுகாதாரத் தொண்டர்க ளுக்கு சுகாதாரநிலைகள் குறித்து தகவல் சேகரிப்பது தொடர்பாக பயிற்சியளித்து வருகின்றது.

நேற்று 300 சுகாதாரத் தொண் டர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட் டது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் இவர்களால் சுகாதார நிலை குறித்து தனிநபர் ஒவ்வொருவருக் கும் மருத்துவப் பதிவேடு வழங் கப்படவுள்ளது.

சுகாதாரத் தொண்டர்களின் செயற்பாடுகளுக்கு யுனிசெப் மீற் றும் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் என்பன அனுசரணை வழங்கியுள் ளன. (ச)

# ஆயுதக் கொள்வனவில் அரசு; தமிழ்க் கூட்டமைப்பு கண்டனம்

(கொழும்பு)

போர்நிறுத்த உடன்படிக்கை அமுலில் இருக்கும்வேளையில் அரசு ஆயுதக் கொள்ளவனவில் ஈடுபட்டுள்ளமையானது மீண்டு மோர் போர் அச்சத்தை ஏற்படுத்தி யுள்ளது என யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் என்.ரவி ராஜ் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் வெளிநாட்டுப் படைகள் பெருமளவில் குவிக்கப் பட்டுள்ளன. இந்நிலையில் ஆயு தக் கொள்வனவும் இடம்பெற்று வருகிறது. இந்த நடவடிக்கையா னது அரசின் யுத்தமேகத்தை எடுத்துக்காட்டுகிறது என அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஈரானிடமிருந்து ஆயுதங்களை கொள்வனவு செய்து இராணுவ பலத்தை அதிகரிக்க அரசு முயற் சிகளை மேற்கொண்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (ச)

# கடை உடைத்து திருட்டு

(ஆனைக்கோட்டை)

ஆனைக்கோட்டைச் சந்தியி லுள்ள கடையொன்றிலிருந்து பெறு மதிவாய்ந்த பொருட்கள் களவாடப் பட்டுள்ளன.

நேற்று முன்தினமிரவு கடை யின் பின்புறக் கதவை உடைத்து உள்ளே நுழைந்த திருடர்கள் பொருட்களைச் திருடிச் சென்றுள் ளனர்.

65 ஆயிரம் ரூபா பெறுமதி யான பொருட்களே இவ்வாறு கள வாடப்பட்டிருப்பதாக மானிப்பாய் பொலிஸில் முறையிடப்பட்டுள் ளது.

இதுதொடர்பாக பொலிஸார் விசாரணையை மேற்கொண்டுள்ள னர். (ச-72)

# மாணவர்கள் பகிஷ்கரிப்பு

(ஆனைக்கோட்டை)

மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவர்கள் நேற்று வகுப்புப் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமது பாடசாலையில் வெற்றிடமாகவுள்ள அதிபர் பதவிக்கு ஒருவரை நியமிக்குமாறுகோரியே பாடசாலைக்கு முன்பாக நின்று மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றிய சண்முக நாதன் இடமாற்றம் பெற்றுச்சென்று பல மாதங்களாகியும் அந்த வெற்றிடத்திற்கு அதிபர் எவரும் இதுவரை நியமிக்கப்படவில்லை.

இதுகுறித்து வலயக் கல்விப் பணிப்பாளருக்கு தெரியப்படுத்திய போதும் இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என மாணவர்கள் தெரிவித்தனர். (ச-72)

## ஆட்கொணர்வு...

இவ் வழக்கில் ஆஜரான ராஜ பக்ஷ நேற்று முதன்முறையாக தனது ஆட்சேபனையைத் தெரி வித்தார். இவ் வழக்கில் தன்னை முதல் குற்றவாளியாக நிறுத் தியமைக்கு அவர் தனது ஆட் சேபனையை வெளியிட்டார்.

இதேவேளை மேற்படி வழக்கு களில் 5 வழக்குகளை யாழ். நீதிமன்றத்திற்கு மாற்றுமாறும் மற்றைய வழக்கிற்கான அரியா லையைச் சேர்ந்த லோகேஸ்வ ரன் சேரன் என்பவரின் வழக்கை எதிர்வரும் 8 ஆம் திகதிவரை ஒத்திவைப்பதாகவும் நீதிவான் உத்தரவிட்டார்.

இவ் வழக்கு விசாரணையின் போது மனுதாரர்கள் சார்பில் சட் டத்தரணி ரெமிடியல்சும் அரச தரப்பில் செல்வி சுகந்தி கந்தசா மியும் ஆஜராகியிருந்தனர்.(ச-05)

## அனர்த்த...

அத்துடன் தெற்கு மற்றும் கிழக்கு கரையோரத்தில் 15 புதிய நகரங்களை அமைத்தல், முற்றா கச் சேதமடைந்த ஹோட்டல் களுக்கு முதலீட்டுச் சபையின் உதவிகளை வழங்குதல் என்பன வும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இதேவேளை ஜனாதிபதி சகல அரச சார்பற்ற ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளையும் நேற்றுப் பிற் பகல் சந்தித்துக் கலந்துரை யாடினார்.

இச் சந்திப்பில் தேசத்தை மீளக்கட்டியெழுப்புவதற்கான செயற்றிட்டத்தை இம்மாதம் நடைமுறைப்படுத்தவேண்டும் என் பதால் அதற்கு தங்களின் உதவி யினை எதிர்பார்ப்பதாக ஜனாதி பதி அங்கு தெரிவித்தார். (த-04)

## பணிகள் முடிவடைந்த...

விதத்திலும் அனுமதிக்கப்போவ தில்லை. அமெரிக்கப் படையினர் அதிமானோர் மார்ச் மாத இறுதி யில் நாடு திரும்பக்கூடியதாக இருக்கும். மேலும் எந்த நாட்டு இராணுவவீரரும் புனரமைப்பு நட வடிக்கைகளில் தொடர்ந்து ஈடுப டுவதை நாம் விரும்பவில்லை.

எவ்வாறாயினும் புனரமைப்பு நடவடிக்கைகள் சிவில் மக்களின் கரங்களுக்கு செல்லவேண்டும் என்றும் அவர் கூறினார்.

ஒருநாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நேற்று இலங்கை வந்த அவர், சுனாமி யால் பாதிக்கப்பட்ட காலி பிர தேசத்தை நேரில்சென்று பார்வை யிட்டார்.

பின்னர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை சந்தித்து இலங் கையில் சுனாமி அனர்த்தப் பாதிப்பு நிவாரணப் பணிகளில் அரசு எதிர்கொண்டுள்ள சவால் கள் மற்றும் அரசுக்கும் விடுத லைப் புலிகளுக்கும் இடையி லான சமாதான முயற்சிகள் என் பன குறித்தும் அவர் கேட்டறிந்து கொண்டார். (ச)

## கனடிய...

பொருட்கள் விடுதலைப் புலிகளின கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு எடுத்துச்செல்வது குறித்தும் அங்கு ஏற்பட்ட அழிவுகள் குறி த்தும் கலந்துரையாடப்பட்டது.

கனடியப் பிரதமருடன் கனடிய சுகாதார அமைச்சர் அஜால் டொசாஜீ, இலங்கைக்கான கனடி யத் தூதுவர் உட்பட பலர் கலந்து கொண்டனர். கூட்டமைப்பின் சார் பில் பாராளுமன்ற குழுத் தலை வர் ஆர்.சம்பந்தன், யோசப் பர ராஜசிங்கம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் ரெஜி ஆகியோர் கலந்துகொண்ட னர். (ச)

## நீரியல்வள...

கடற்றொழில் நீரியல்வளத்துறை அமைச்சர் சந்திரசேன விஜயசிங் காவின் பணிப்பின் பேரிலேயே அவர் யாழ். குடாநாட்டிற்கு வருகை தரவுள்ளார்.

இங்குவரும் அவர் சுனாமி அனர்த்தத்தினால் சேதமான மீன் பிடி உபகரணங்கள் மற்றும் மீன வர்களின் சொத்துக்கள் குறித்த விபரங்களைத் திரட்டவுள்ளார். (ப-101)











நிறைஞ்சனாஸ்
சங்கானை
அர்ஜுன்(இருவேடம்)
லைலா, வடிவேல் நடித்த
ஜெய்சூர்யா
காட்சிநேரம்: 1.00,2.45, 6.00, (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
ANACONDA -2

## பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

✧பத்திரிகை விநியோகஸ்தர்கள்

(சொந்த மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவரும், இரவில் நிறுவனத்தில் தங்கியிருப்பதும் அவசியமானதாகும்.)

✧பாதுகாப்பு உத்தியோகத்தர்

(ஆண், பெண் இருபாலாரும்)

✧சிற்றூழியர்கள்

(ஆண்கள் - பகல், இரவுக் கடமை)

தகுதியானவர்கள் 18.01.2005 இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நேரில் வரவும்

ஆளணி முகாமையாளர்
(வலம்புரி)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.01.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.